கோகுலம்

குழந்தைகள் பத்திரிகை
2-3-1975
50 காசு





உத்தம ஞானப் பேரொளிச் சுடரிவர்
உலகெலா மொளிபெறத் தவமேற் கொண்டார்

எத்தனை கோடி புண்ணியம் செய்தோம்
இன்றிவர் தோற்றம் கண்டிடப் பெற்றோம்!

வண்ண ஓவியம் : ஆர். நடராஜன்

— இ. பாலதண்டபாணி

கோகுலம்

மலர் 3 □ இதழ் 24

மார்ச் 2, 1975

ஆனந்த, மாசி 18



உயிர்களிடத்து அன்பு வேண்டும் - தெய்வம்
உண்மை யென்று தானறிதல் வேண்டும்
— பாரதியார்

சந்தா விவரம்:

உள்நாடு

ஒரு வருடம் ரு. 13-00

ஆறு மாதம் ரு. 6-50

வெளிநாடுகள்:

ஆண்டுச் சந்தா ரு. 27-50

உள்ளத்தைக் குளிப்பாட்டுங்கள்!

ஸ்ரீ காஞ்சிப் பெரியவர்கள்

குழந்தைகளான உங்களுக்குச் சொறி சிரங்கு ஒன்றும் வராமலிருக்க வேண்டும். இவை வந்துவிட்டால் ரொம்பக் கஷ்டப்படுகிறீர்கள். படிக்க முடிவதில்லை. விளையாட முடிவதில்லை. உட்கார முடிவதில்லை. சாப்பிட முடிவதில்லை. சொறி, சிரங்கு எதனால் உண்டாகிறது? அழுக்கினால் உண்டாகிறது. ஆகவே, உடம்பை அப்பழுக்கில்லாமல் சுத்தமாக வைத்துக் கொண்டால்தான் சொறியும் சிரங்கும் வராமல் இருக்கும். உடம்பைச் சுத்தமாக வைத்துக் கொள்வது எப்படியென்றால் நன்றாகத் தேய்த்துக் குளிக்க வேண்டும். சோப்போ, சிகைக்காயோ (சீக்காய் என்று பேச்சிலே சொல்வது) போட்டு உடம்பைத் தேய்த்து நன்றாக நீராடினால் உடம்பின் அழுக்குகள் போகின்றன. ஒரு நாள், ஒரு வேளை இப்படிக் குளித்துவிட்டால் போதாது. மறுபடியும் மறுபடியும் அழுக்கு சேர்ந்து கொண்டேதான் இருக்கும். எனவே, தினந்தினமும் நீராட வேண்டும். பிரதி தினத்திலும்கூடக் காலை மாலை இரண்டு வேளைகளிலும் குளித்தால் மிகவும் நல்லது. உங்களுடைய சின்ன வயசிலேயே பச்சைத் தண்ணீரில் குளிக்கப் பழகிவிட்டீர்களானால் அப்புறம் சளி, இருமல்கூட உங்களைத் தீண்டாது. பச்சைத் தண்ணீரில் குளித்தால் நரம்புகளுக்கும் தெம்பு. மனசிலும் ஓய்ச்சல் போய் உற்சாகமாக இருக்கும். உடம்பிலே அழுக்குப் போனதோடுகூட மனசுகூடப் பளிச்சென்று இருக்கிற மாதிரி இருக்கும் - வேலையில் சுறுசுறுப்பு பிடிக்கும்.

சுத்தத்தைத்தான் தூய்மை, தூய்மை என்பது. நீங்கள் எல்லாவிதத்திலும் தூய்மையாக இருக்க வேண்டும். அழுக்கு என்பது உங்கள் கிட்டவே வரக் கூடாது. அதற்குத்தான் முதலில் உடம்புக்குக் குளிப்பதைச் சொன்னேன். உடம்புக்கு அப்புறம் உடுப்பு.

நீங்கள் போட்டுக் கொள்ளும் உடை அழுக்கு மயமாக இருந்தால் எத்தனை குளித்தும் பிரயோஜனம் இல்லை. துணியில் அழுக்கு இருந்தாலும் சொறி சிரங்கு வரத்தான் செய்யும். சலவைக்குத் துணியைப் போட்டால் நன்றாக வெளுத்துத் தருவார்கள். அதைவிட நீங்களே உங்கள் உடைகளை நன்றாகச் சவுக்காரம் போட்டுத் துவைத்துக் கொள்ளுவது சிறந்தது. துணியைத் துவைத்துப் பிழிவது உங்கள் தேகத்துக்கே ஓர் ஆரோக்கியப் பயிற்சியாக இருக்கும். நாமே நம் துணியை இவ்வளவு நன்றாகச் சுத்தப்படுத்தி வெள்ளை வெளேரென்று ஆக்கியிருக்கிறோம் என்றால் உங்களுக்கே அதில் ஒரு பெருமை, சந்தோஷம் இருக்கும். உங்கள் பெற்றோர்களுக்கும் சந்தோஷமாக இருக்கும். சலவைச் செலவும் இதனால் குறையும்.



உடம்பைத் தேய்த்துக் குளிப்பது, உடுப்பைத் துவைத்துக் கட்டுவது — இவை இரண்டாலும் அழுக்கிலிருந்து, சொறி சிரங்கிலிருந்து விடுபட வேண்டும்.

உடல், உடை இவற்றுக்கு மேலாக ஒன்று இருக்கிறது. அதுதான் உள்ளம், மனம். மனச் சுத்தம், உள்ளத் தூய்மைதான் மிக மிக முக்கியம். அது இல்லாமல் உடம்பும், உடுப்பும் எவ்வளவு தூய்மையாக இருந்

தாலும் பயனேயில்லை. மனசிலே அழுக்குப் படியாமல் அதை அவ்வப்போது தேய்த்துக் கழுவிக் குளிப்பாட்டிக் கொண்டே இருக்க வேண்டும்.

மனசுக்கு ஏற்படுகிற அழுக்கு என்பது என்ன? தப்பு, தவறு செய்வதுதான் உள்ளத்துக்கு அழுக்கு. நாம் செய்கிற காரியங்களில் தவறு ஏற்படக் கூடாது. அதாவது கெட்ட நோக்கங்களுக்காகக் காரியம் செய்யவே கூடாது. ஆனாலும் காரியம் என்று வந்துவிட்டால் நல்லதைச் செய்கிறபோதுகூட அதிலே சில தப்பு, தவறுகள் நேர்ந்துவிடலாம். இதனால் பெரிய குற்றம் — அதாவது தோஷம் இல்லை. ரொம்பப் பெரியவர்கள்கூட எவ்வளவோ நல்ல காரியங்கள் செய்கிற போது அவர்களையும் கொஞ்சம் சறுக்கிவிட்டிருக்கிறது. நாமே எல்லாம் செய்து கொள்ள முடியும் என்று கர்வப்படாமல், பகவான் துணையால்தான் எதையும் சாதிக்க முடியும் என்று நாம் உணருவதற்காகவே இப்படிச் சில தவறுகள் நேர்ந்துவிடுகின்றன. இம்மாதிரி சமயங்களில் நீங்கள் பகவானை வேண்டிக் கொள்வதுதான் சரி.

ஆனால் சாதாரணமாக ஒரு தப்புச் செய்தபோது உங்களுக்கு என்ன தோன்றுகிறது? அது ஓர் அழுக்கு மாதிரி உங்கள் மனசையே உறுத்துகிறது. உடனே இந்த அழுக்கை யாரும் தெரிந்து கொண்டுவிடக் கூடாது என்று அதை மூடி மறைக்கத் தோன்றுகிறது. நியாயமாக, தவறுதல் உண்டானவுடன் பிரார்த்தனை பண்ணினால், அந்தப் பிரார்த்தனையே சோப்பைப் போல் அந்தத் தப்பை அகற்றிவிடும். அப்படிச் செய்யாமல் தப்பை முற்றவர்கள் தெரிந்து கொள்ளாமல் மூட வேண்டும் என்கிற போது, பொய் சொல்ல வேண்டியதாகிறது. அழுக்கைத் தேய்த்துக் கழுவாமல், மூடி மூடி வைத்தால் அது உடனே பழுத்துச் சிரங்காகிவிடும். அது மாதிரி, தப்பை மூடியவுடன் அது பொய் என்ற சிரங்காக ஆகிவிடுகிறது. உள்ளத்தை ரொம்பவும் கெடுக்கிற பயங்கரமான சிரங்கு பொய்தான்.

எதனால் தப்பை மறைக்கப் பார்க்கிறோம்? ஒன்று, நம்மை மற்றவர் நல்லவன் என்றே நினைக்க வேண்டும் என்ற பொய் எண்ணத்தினால்; அல்லது இன்னொருத்தரிடம் பயத்தினால் மறைக்கப் பார்க்கிறோம். பொய் என்பது சிரங்கு என்றால் பயம் என்பது சொறி மாதிரி. பெரியவர்களிடமெல்லாம் உங்களுக்கு நிறைந்த மரியாதையும் மதிப்பும் இருக்கத்தான் வேண்டும். ஆனாலும் அர்த்தமில்லாத பயம் கூடாது. பயம் உள்ளத் தூய்மையைக் கெடுக்கிற அழுக்கு. தப்பு செய்தால் கூட, அதை உணர்ந்து, பணிவுடன் உள்ளபடி பெரியவர்களிடம் சொல்ல வேண்டுமே ஒழிய, பொய்யால் மூடி மறைக்கக் கூடாது. தப்பு செய்தது போதாது என்று, பொய்யும் சொன்னோம் என்பது வெளிப்பட்டு நமக்கு மேலும் அவமானம், கஷ்டம்தான் ஏற்படும். உள்ளபடி சொன்னால் பெரியவர்கள் மன்னித்துவிடுவார்கள். மன்னிக்காமல் அவர்கள் தண்டித்தாலும் பரவாயில்லை. அவர்களுக்கு அந்த உரிமை உண்டு. 'நாம் தப்பு செய்தோம்; அதனால் அதற்குரிய தண்டனையைப் பெறுகிறோம்' என்று தைரியத்துடன் தண்டனையை ஏற்க வேண்டும். தைரியம், சத்தியம் இவை எல்லாம் மன அழுக்கைப் போக்குகிற சோப், சிகைக்காய் மாதிரி.

இன்னொரு பெரிய அழுக்கு, குழந்தைகளிடம் கலபத்தில் சேர்கிற அழுக்கு, பொறாமைக் குணம். இன்னொரு பையன் ஸில்க் சட்டை போட்டுக் கொண்டு வந்தால், காரில் வந்து இறங்கினால், முதல் கிளாஸில் ஸினிமாவுக்குப் போனால் உடனே அவனைப் பார்த்துப் பொறாமை உண்டாகி விடுகிறது. அது அழுக்கு மாதிரி மனத்தை ரொம்பவும் கெடுத்துவிடும். பலவிதமான சண்டைகளில் நம்மைக் கொண்டு தள்ளிவிடும். அவனைச் சண்டை போட்டு ஜயிக்க முடியவில்லை என்றால், கோள் சொல்லிக் கெடுக்கத் தோன்றும். இம்மாதிரி ஓர் அழுக்கிலிருந்து இன்னோர் அழுக்கு என்று வளர்ந்து கொண்டே போகும். இந்த அழுக்கான எண்ணங்களாலே நம் படிப்பிலே கவனம் குறையும். விளையாட்டில் உற்சாகம் குன்றும். அறிவு, உடம்பு இரண்டையும் இவ்வாறு பாழாக்கிக் கொள்வோம். நம்மை நாமே கெடுத்துக் கொள்வதைத் தவிர பொறாமையால் வேறு எந்த விதப் பயனும் இல்லை.



ஒன்றே ஒன்றில்தான் போட்டியிருக்க வேண்டும். 'அந்தப் பையன் இவ்வளவு நிறைய மார்க்கு வாங்குகிறானே! நாமும் அப்படி வாங்க வேண்டும்' என்ற ஆசையுடன், ஊக்கமாகப் படித்துப் போட்டி போட வேண்டும். இந்தப் போட்டியும் பொறாமையாகிப் போவதற்கு விடக்கூடாது.

நமக்கெல்லாம் பல பிறவிகள் உண்டு. போன பிறவியில் நம்மைவிட நல்லது செய்த பசங்களுக்கு இந்தப் பிறவியில் பகவான் நம்மைவிடச் சௌகரியங்கள் தந்திருக்கிறார். அவர்களைக் கண்டு, பொறாமைப்படலாகாது. இதே போல், நம்மளவு சௌகரியமோ, 'அறிவோ அழகோ இல்லாதவர்களைப் பார்த்து நாம் தாழ்த்தியாக நினைத்துக் கர்வப்படவும் கூடாது. கர்வம் என்பது சொறி, சிரங்கு எல்லாவற்றையும்விடக் கொடிய ஒரு பெரிய நோய். போன பிறவியில் நம்மைவிடத் தப்பு செய்ததால் அவர்கள் இப்போது பணத்தில், புத்தியில், அழகில் நம்மைவிடக் கீழாக இருக்கலாம். ஆனால் நமக்குக் கர்வம் வந்தால், இதுவே அவர்கள் செய்த தப்புக்களையெல்லாம்விடப் பெரிய தப்பு. இதனால் நாம் அடுத்த பிறவியில் இப்போது அவர்கள் இருப்பதைவிடக் கீழான நிலையில் பிறப்போம்.

இன்னும் பலவிதமான அழுக்குகள் இருக்கின்றன. பிறர் இல்லாதபோது அவர்களைப் பற்றிக் கேலியாகவோ, நிந்தையாகவோ பேசுவதில் உங்களுக்கு எண்ணம் போகவே கூடாது. இப்படிப் பேசுவதில் ஒரு சுவாரசியம் இருக்கிறதே என்பதற்காக இதில் ஈடுபடக் கூடாது. ஒருவனிடம் தப்புத் தெரிந்தால், அதை நேரில் நல்லபடியாக, நயமாக, அன்பாக அவனிடமே சொல்ல வேண்டுமே ஒழிய, அந்தத் தப்பை மற்றவர்களிடம் சொல்லி சந்தோஷப்படுவது வெறும் கோழைத்தனம்தான். இப்படிப் புறங் கூறுகிறபோது அங்கே அந்தப் பையன் இல்லாதிருக்கலாம் — ஆனால் எங்கேயும் உள்ள ஸ்வாமி அங்கேயும் இருக்கிறார். என்றைக்கோ ஒரு நாள் அவர் தண்டித்து விடுவார் அதற்கு யாரும் தப்ப முடியாது.

பொய், பயம் பொறாமை, நிபந்தனை இந்த அழுக்குகளைப் போக்குகிற சோப்பு, சிகைக்காய், அரப்பு, வாசனைப் பொடிமாதிரி சத்தியம், தைரியம், விட்டுக் கொடுக்கிற சுபாவம், இன்சொல் ஆகியன இருக்கின்றன,

சோப்பு முதலானவை அழுக்கைப் போக்குகிற பண்டங்களானாலும் அவற்றை அப்படியே வைத்துக் கொள்ள முடிவதில்லை. இவ்விதம் செய்தால் இந்த வஸ்துக்களே அழுக்கு மாதிரிதான் நம் மீது படிகின்றன. சோப்பே நேராக நம் மேல் ஒட்டிக் கொண்டு விட்டால் அதுவே பெரிய அவஸ்தையாகிவிடும். ஆகவே, அழுக்குப் போக்கும் வஸ்துக்களும் நமக்குப் பயனாக வேண்டுமானால் ஜலம்தான் அத்தியாவசியமாக இருக்கிறது. சோப்பு முதலியவைகளை ஜலத்தில் குழைத்தே பூசிக் கொள்கிறோம். அதற்கப்புறமும் இவையே உடம்பைப் பிடித்துக் கொண்டு அழுக்காகி விடாமல், நிறைய நீரைக் கொட்டிக் கொண்டு குளிக்கிறோம்.


இப்படியே நம் மன அழுக்கைப் போக்குகிற நல்ல குணங்கள் பல இருந்தாலும்கூட, வேறொரு ஜலம் இல்லாவிட்டால் இந்த நல்ல குணங்களும் நமக்கு மனத் தூய்மையைக் கொடுப்பதற்குப் பதில் கெடுப்பவையாகவே ஆகின்றன. அந்த ஜலம்தான் ஸ்வாமியிடம் பக்தி. எல்லா அழுக்குகளும் நீங்குவதற்குக் கங்கா ஸ்நானமாக இருப்பது ஸ்வாமியிடம் செய்கிற பிரார்த்தனை தான்.

சின்ன வயசிலிருந்தே தினமும் ஐந்து நிமிஷங்களாவது தனிமையில் உட்கார்ந்து ஸ்வாமியையே நினைக்க வேண்டும். ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையாது. எனவே, இப்போதே இந்த நல்ல பழக்கத்தை ஆரம்பித்துவிட வேண்டும். முதலில் நமக்கு நேராக எல்லா நன்மைகளும் செய்து வருகிற தாய் தந்தையரையும், ஆசிரியரையும் மனத்தில் நினைத்து வணங்க வேண்டும். பிறகு உலகம் முழுவதற்கும், ஈ, எறும்பிலிருந்து நம் அப்பா, தாத்தா உள்பட எல்லாருக்கும், தாயும் தந்தையுமாக இருக்கிற ஸ்வாமியை நினைக்க வேண்டும். ஒரு நாள் குளித்தால் போதாது போலவே, தினம் தினமும் மன அழுக்குப் புதிதாகச் சேருமாதலால், என்றென்றும்பிரார்த்



தனை செய்து மனத்தைக் கழுவ வேண்டும்.

சூரிய மண்டலம் எத்தனை பெரிசு! அதை விடப் பெரிய நட்சத்திர மண்டலங்கள் எத்தனையோ இருக்கின்றனவாம். இத்தனையையும் செய்த ஸ்வாமி எவ்வளவு பெரியவராக இருக்க வேண்டும்? அத்தனை பெரியவர் குழந்தைகளான நம் பிரார்த்தனையையும் கேட்கிறார்! புழு பூச்சியிலிருந்து எல்லாவற்றுக்கும் இந்த உலகத்தில் அததற்குத் தேவைப்படுகிற ஆகாரத்தை வைத்திருக்கிறார். அப்படியானால் அவர் இருதயத்தில் எத்தனை அன்பு இருக்க வேண்டும்? அன்பு இருப்பது மட்டுமல்ல. நாம் ஒழுங்கில்லாமல், தப்பும் தவறுமாகக் காரியம் செய்வது போலவா அவர் செய்கிறார்? அவரை 'ஏன்?' என்று கேட்டுக் கண்டிப்பதற்கு அவருக்கு மேல் எவரும் இல்லாவிட்டாலும் அவர் எத்தனை ஒழுங்கோடு தினமும் இந்தப் பூமியை ஒரு முறை சுழலவிட்டுப் பகலையும் இரவையும் படைக்கிறார்? இதே போல் இந்தப் பூமியைச் சரியாக ஒரு வருஷத்தில் சூரியனைச் சுற்றி வரச் செய்து பலவிதமான பருவங்களை உண்டாக்குகிறார். ஒவ்வொன்றும் இப்படித்தான் இருக்க வேண்டும் என்று ஒழுங்கு செய்திருக்கிறார். நாமும் அவரைப் போல் மனசில் அன்பாக இருக்க வேண்டும்; காரியத்தில் ஒழுங்காக இருக்க வேண்டும். காரிய ஒழுங்குக்குத்தான் தர்மம், அறம் என்று பெயர். அன்பும் அறமும் உருவான ஸ்வாமியை வேண்டினால் நமக்கும் இவை உண்டாகும். அவருடைய அருளை






நினைத்து நன்றி செலுத்துவதே மன அழுக்கையெல்லாம் போக்குகிற பெரிய ஸ்நானம்.

கெட்ட பிள்ளையாவது எளிது. ஆனால் அந்தப் பெயர் எடுத்துவிட்டால் அப்புறம் நமக்கு எத்தனை அவமானம், கஷ்டம்! வாழ்க்கையில் முன்னுக்கு வரவே முடியாது. நல்ல பிள்ளையாவது கடினம் என்று தோன்றலாம். ஆனால் கடவுளின் அருளைத் துணை கொண்டால் இதையும் எளிதாகச் சாதித்துவிடலாம். நல்ல பிள்ளை என்று பெயர் வாங்கினால்தான் வாழ்க்கையில் முன்னேற நல்ல நல்ல வாய்ப்புக்கள் வரும். ஒருநாள் இல்லாவிட்டால் ஒரு நாள் கெட்டவன் தண்டனை பெறத்தான் செய்வான்.

ஸ்வாமியின் பாத கமலங்களை விடாமல் பிடித்துக் கொண்டு, ''எனக்கு வேறு கதியில்லை; நீதான் நல்ல வழி காட்ட வேண்டும்'' என்று வேண்டிக் கொள்ள வேண்டும். பிஞ்சான உங்கள் குழந்தை உள்ளத்திலிருந்து உண்டாகிற வேண்டுகோளுக்கு ஸ்வாமி நிச்சயம் பலன் தருவார். உள்ளத் தூய்மையை இவ்வாறு இளவயதிலேயே பெறுவதுதான் எளிது. பிற்பாடு அழுக்கு ரொம்பவும் தடித்துப் போக விட்டால் நல்ல வழி தேட வேண்டும் என்ற உணர்வு கூடப் போய்விடும். எனவே, இன்றிலிருந்து பகவானைப் பிரார்த்தியுங்கள். உங்களை அழுக்கேயில்லாமல் பளிச்சென்று வைத்து உங்களுக்கு ஒரு குறைவும் வராமல் ஸ்வாமி காப்பாற்றுவார்!


  

நயாகரா


உலகிலுள்ள நீர்வீழ்ச்சிகளிலே புகழ் பெற்றது நயாகரா நீர்வீழ்ச்சி. மிகப் பெரிய — மிக உயரமானது அல்ல — நீர்வீழ்ச்சியும் இதுதான். ஐக்கிய அமெரிக்கா, கானடா இரு நாடுகளுக்கும் உரியதாக இரு தேசங்களின் எல்லைக் கோட்டில் இருக்கிறது இந்நீர்வீழ்ச்சி. 'நீரின் இடிமுழக்கம்' என்பது செவ்விந்திய இனத்தவர் இதற்கு அளித்த பெயர். நயாகரா என்ற பெயரும் அவர்கள் மொழியிலிருந்து வந்ததுதான். ஒண்டாரியோ (Ontario) எரீ (Erie) ஆகிய ஏரிகளுக்கு இடையே இணைப்பாக ஓடும் 34 மைல் நீளமுள்ள நயாகரா நதியில் தான் இந்த அற்புதமான நீர்வீழ்ச்சி ஏற்படுகிறது. 2,55,000 சதுர மைல் பரப்பை வட அமெரிக்கக் கண்டத்தில் ஆக்கிரமித்துக் கொண்டுள்ள இந்த நதியில் விநாடிக்கு ஒன்றரை மில்லியன் காலன் தண்ணீர் ஓடுகிறது. நயாகரா நதியின் இரு கரைகளிலும் நயாகரா நீர்வீழ்ச்சி நகரம் என்ற பெயரில் இரு நகரங்கள் உள்ளன. ஒன்று அமெரிக்கப் பகுதியிலும் மற்றது கனடாவின் எல்லையிலுமாக இரண்டு நகரங்கள் இருப்பது போலவே நீர்வீழ்ச்சியிலும் இரண்டு உள்ளன. மொத்த நீரில் ஐந்து சதவிகிதமே அமெரிக்கப் பகுதி வீழ்ச்சியில் கொட்டுகிறது. வெள்ளாட்டுத் தீவு (Goat Island) இந்த நீர்வீழ்ச்சியை இரண்டாகப் பிரிக்கிறது. இந்தத் தீவில் மனிதர்கள் யாரும் வசிக்கவில்லை. கானடா தேசத்தின் பகுதியில் உள்ள குதிரை லாட வடிவமுள்ள நீர்வீழ்ச்சி தான் அற்புதமானது, பயங்கரமானதுமாகும். இதன் உச்சியில் இந்த நீர் வீழ்ச்சியின் அகலம் 2500 அடிகள். 160 அடி உயரத்திலிருந்து கீழே விழுகிறது நதியின் 95 சதவீத நீர். இத்தனை தண்ணீர் இந்தப் பகுதியில மட்டுமே வழிந்து விழுவதினால் பாறைகள் அரிக்கப்பட்டுக் குதிரை லாடம் போல் இந்தப் பகுதி ஆகி விட்டது. இந்த நீரை அமெரிக்கப் பகுதிக்குத் திருப்பி விட்டு நில அரிப்பைத் தடுப்பதற்கான வழி வகைகளில் இரு நாட்டு அரசுகளும் முயன்று வருகின்றன.


நீர்வீழ்ச்சி விழும் இடத்தில் பயங்கரமான சுழல் ஏற்பட்டு அங்கு நீர் ஆக்ரோஷமான அட்டகாசத்துடன் சுழன்று மோதி வெளியேறும் அற்புதக் காட்சியைக் காண்பதற்காகவே பல நாடுகளிலிருந்தும் மக்கள் இங்கு வருகிறார்கள். இந்தப் பயங்கர நீர்வீழ்ச்சியின் பின்னால் சென்று பார்க்க வசதியாக மலையைக் குடைந்து 'லிப்ட்' வைத்திருக்கிறார்கள். நீர்வீழ்ச்சியின் வேகத்தில் ஏற்படும் நீர்ச் சிதறல்களிலிருந்து தடுத்துக் கொள்ள 'வாட்டர் புரூப்' ஆடை அணிவித்து லிப்ட் மூலம் இங்கு பயணிகளை அழைத்துப் போய்க் காட்டுகிறார்கள். நீர்ச் சுழல் பகுதியின் மேலாகப் போய் அதைக் கண்டு களிக்கும் வகையில் நதியின் குறுக்காக வானவில் பாலம் என்ற பெயரில் ஒரு பாலம் இரு நாடுகளையும் இணைக்கிறது. உருக்குக் கயிற்றில் ஊசலாடியபடி செல்லும் 'விஞ்ச்' சாதனத்தில் அமர்ந்து சுழல் பகுதிக்கு மிக மிக அருகே சென்றும் திகில் அடையலாம்!

சர்க்கஸில் கயிற்றின் மீது நடப்பவர்களைப் பார்த்திருப்பீர்கள். அதேமாதிரி இந்தப் பயங்கர நீர்வீழ்ச்சியின் குறுக்கே கயிற்றின் மீது நடந்து சாகஸம் புரிந்திருக்கிறார் ஒரு பிரெஞ்சுக்காரர். — இயற்கை ஏற்படுத்திய உலக அதிசயங்கள் பலவற்றுள் இந்த அற்புத நயாகரா நீர்வீழ்ச்சியும் ஒன்று.









முகத்தில் அறிவின் பிரகாசம், கண்களில் அருள், உடல் முழுதும் பக்தியின் அடக்கம், ஆசாரத்தின் தூய்மை, தவத்தின் ஜொலிப்பு, இவற்றோடு ஓர் அந்தணர் சிவ நாமத்தை மெல்ல ஓதியபடி குடுமித் தேவரை நெருங்கி வந்தார். தோளில் வில்வம், நாகலிங்க புஷ்பம், தும்பை, கரு ஊமத்தை மலர்கள் நிறைந்த குடலை. தலையில் தண்ணீர்க் கரகம். கையில் நிவேதனத்துக்கான அன்ன பாத்திரம் — இவர்தான் சிவகோசரியார்.

திண்ணன் அப்பால் போயிருந்த காலை வேளையில் வழக்கம் போலத் தமது பூஜையை முடித்துச் செல்ல வந்திருந்தார்.

ஐயனை அணுகுகையிலேயே சிவகோசருக்குத் தூக்கிவாரிப் போட்டது. 'இதென்ன? இங்கே எலும்புத் துண்டுகள்! யார் இந்த மாபெரும் அபசாரத்தைச் செய்தவர்?' என்று பதை பதைத்தார். அவற்றைத் தாமே பெருக்கிச் சுத்தம் செய்தால் ஒழிய வேறு வழியில்லை என்பதால் பூக்குடலையையும், அன்னத்தையும் சற்றுத் தள்ளி மறைவிடத்தில் வைத்துவிட்டு ஸ்வாமி சந்நிதியை அலகிட்டு மெழுகினார். பிறகு இதனால் தமது ஆசாரம் கெட்டதே என்றெண்ணி மீண்டும் ஆற்றுக்குச் சென்று ஸ்நானம் செய்து திரும்பினார். கரக நீரை லிங்கத்தின் தலையில் அபிஷேகம் செய்ய அருகே சென்ற போது, அங்கே லிங்கத்தின் உச்சியில் பூஜைக்கு அருகதை இல்லாத தழைகளையும் பூக்களையும் கண்டு நெஞ்சு நொந்தார். எல்லாவற்றையும் விடச் சுரீலென அவருள்ளே தாக்கியது, அந்தத் தலையில் கண்ட செருப்பு அடையாளம். 'வேண்டும் என்றே எவரோ இந்த மாபாதகத்தைச் செய்திருக்கிறார்கள். என்னைச் சோதிக்கவே ஐயன் இவற்றையும் ஏற்றிருக்கிறான்' என எண்ணினார்.

"நான் என்ன பிழை செய்தேன் என்று இந்த அலங்கோலத்தைக் காட்டி என்னைத் தண்டிக்கிறாய் இறைவா?" என்று அலறினார்.

பிறகு ஒருவாறு தேறி அபிஷேகம், அருச்சனை, நிவேதனம் முடித்து வீட்டுக்குத் திரும்பினார்.

கடவுளுக்கே கண் தந்தார்

ரா. கணபதி

திண்ணப்பர் மறுபடியும் வந்தார், அதே சந்நிதிக்கு. நேற்றுப் போலவே இன்றும் உமிழ் நீர் அபிஷேகம் — காட்டுத் தழை அருச்சனை. நிவேதனம் மட்டும் நேற்றுப் போல் அல்ல — இன்றைக்கு 'ஸ்பெஷல்' நிவேதனம் போட்டிருந்தார்.

''குடுமித் தேவா ! நேற்று வெறும் பன்றி மாமிசம் மட்டுமே படைத்தேன். இன்று உனக்குப் பல்வேறு ருசிகளைத் தருவதற்காகப் பன்றியைத் தவிர கலை, மரை, கடமை ஆகிய மானினங்களையும் வேட்டையாடி அவற்றின் ஊனையெல்லாம் சேர்த்து அவியல் செய்திருக்கிறேன். தித்திப்புக்குத் தேனடையும் எடுத்து அதில் பிழிந்திருக்கிறேன். ஜமாயுங்கள்'' என்று படைத்தார்.

* * *

''நாணனையும் காடனையும் தங்கள் மகனார் மறந்துவிட்டார். நாணத்தை விட்டுக் காளத்திக் காடனாகவே ஆகி விட்டார்'' என்று உடுப்பூருக்குத் திரும்பிய திண்ணரின் தோழர்கள் நாக மன்னனிடம் புலம்பினர்.

அரசன் அதிர்ந்துவிட்டான்.

தேவராட்டியை அழைத்தான்.

''உன் வார்த்தையைக் கேட்டு என் ஒரு மகனை, திருமகனை வேட்டைக்கு அனுப்பினேன். குடுமித் தேவர் அவனையே வேட்டையாடி விட்டாராமே!'' என்று கதறினான்.

''நான் அன்று சொன்னது முற்றிலும் சரியே'' என்று அடித்துச் சொன்னாள் தேவராட்டி.

அப்போதும் அவள் நினைத்த உட்பொருளை அரசன் அறியவில்லை.

''அப்படியானால் நீ இப்போதே என்னோடு காளத்திக்கு வா. குடுமிநாதர் மந்திரத்துக்கு எதிர் மந்திரம் போட்டு என் பிள்ளையை மீட்டுத் தா'' என்றான்.

''வருகிறேன், நீயே உன் மகனைப் பார்த்து நான் சொன்னதன் உண்மையைப் புரிந்து கொள்வாய்'' என்றாள் தேவராட்டி.

நாகனும், தேவராட்டியும், வேட்டுவப் பரிவாரமும் காளத்தி அடைந்தனர். ஆனால் திண்ணப்பருக்கோ தந்தை உற்றம், சுற்றம் எதுவுமே அடியோடு தெரியவில்லை. குடுமிநாதர் ஒருவரே அவருக்குச் சகல உறவாகவும் இருந்தார்: மற்றோரைக் கண்ணெடுத்தும் பாராமல், கண்டாலும் அடையாளம் புரியாமல், ஐயனிடமே கெஞ்சுவதும், கொஞ்சுவதும், அழுவதும் சிரிப்பதும், ஆடுவதும் அடங்குவதுமாக இருந்தார்.

''தன் பிள்ளைதானா அது? அவனது உணர்வு முழுதும் எப்படி இவ்விதம் மாறிற்று?'' என்று அதிசயித்தான் நாகன்.

''இந்த அன்பின் ஆவேசத்துக்கு முன் எனக்கு வருகிற ஆவேசம் எம்மாத்திரம்? இவனை எப்படி நான் மாற்ற முடியும்?'' என்று கேட்டாள் தேவராட்டி.

''மாற்றவே வேண்டாம்'' என்றான் நாகன் கண்ணீர் மல்கி, நாத் தழுதழுக்க. ''எனக்கு 'மகனாக' அவன் இப்போது தெரியவில்லை. 'மகானாக'த் தெரிகிறான். அன்று நீ சொன்னது மெய்தான், தேவராட்டி! என்னைவிட இவன் புகழ் கொள்ளப் போகிறான்—ஆனால் வேறு விதத்தில். ஏனெனில், நான் எட்டியும் பிடிக்க முடியாத மேல் நிலை அல்லவா அடைந்துவிட்டான்? அவனை நாம் தொந்தரவு செய்ய வேண்டாம் - செய்தாலும் பயனிராது. வாருங்கள், போகலாம்'' என்றான்.

பட்டாளம் புறப்பட்டுவிட்டது.

அது வந்ததையோ, போனதையோ திண்ணர் கனவிலும் நினைக்கவில்லை. உறக்கமேயின்றி ஐயனுக்குக் காவல் இருந்தவருக்குக் கனவு எப்படி வரும்?



மறு தினமும் திண்ணப்பர் படையலுக்காக வேட்டை மேல் சென்ற சமயத்தில் குருக்கள் பூஜைக்கு வந்தார். நேற்றைய அபசாரம் இன்றும் புதுப்பிக்கப்பட்டிருப்பது கண்டு புழுவெனத் துடித்தார்.

ஆயினும் அவரால் திண்ணப்பரைப் போல் நாள் முழுதும் ஐயன் பக்கத்தில் காவல் இருக்க முடியவில்லை. ஊருக்குள் மனை, மனைவி, மக்கள் முதலியோர் அவருக்கு இருந்தனரே ! அவர்களைவிட்டு இந்தத் தனிக் காட்டில் அவர் இருக்க முடியுமா ? அவர் இருக்க நினைத்தாலும் அவர்கள் விடுவார்களா ?

எனவே, சொல்லொணாத் துயரத்தோடு ஐந்து நாட்கள் தமது பூஜையை முடித்தபின் ஸ்வாமியை அபராதம் செய்பவருக்கு ஆளாக்கிவிட்டு அவர் வீடு திரும்ப வேண்டியதாயிற்று.

ஐந்தாம் நாள் இரவு அவரால் தூங்கவே முடியவில்லை. ''பிரபு! நாளைக்கும் இதே அபசாரம் நிகழ்ந்தால் என் உயிரை மாய்த்துக் கொள்வேன்'' எனச் சூளுரைத்தார்.

அதிலேயே சற்று நிம்மதி வந்தது. கண்ணயர்ந்தார்.

முக்கண் பரமன் அவரது கனவிலே தரிசனம் தந்தார். ''அப்பனே, வருந்தாதே. எவனோ கீழ் மகன் எனக்கு அபசாரம் செய்தான் என்று எண்ணித் தவிக்காதே. எனக்குப் பரம பக்தன் செய்கிற உபசாரமே இவை அனைத்தும். என் பெருமைகளை, நீ சொல்கிறாயல்லவா? அந்த வேட பக்தனின் பெருமைகளை, நானே சொல்கிறேன் கேள்: அவனுடைய உருவம் முழுவதும் என் மேல் கொண்ட அன்பேயாகும். அவன் அறிவெல்லாம் என் ஒருத்தனைத்தான். அவன் செய்கைகள் அத்தனையும் எனக்கு மிக மிக உவப்பான பூஜையேயாகும். அவனது செருப்படி, குழந்தை முருகனின் பாதம் படுவதைவிட எனக்கு ஆனந்தமூட்டுகிறது. அவன் உமிழும் நீரைக் கங்கை முதலான தீர்த்தங்களைவிடத் தூயதாகக் கருதுகிறேன். அவன் சூடிக் களைந்த பூக்கள் அம்பிகையும், திருமாலும், பிரமனும், மற்ற தேவரும் அர்ச்சிக்கும் தெய்வ மலர்களைவிட எனக்குப் பிரியமானவையாகும். அவன் படைக்கும் மாமிசமோ புனித யாகத்தின் புண்ணிய ஆஹுதிக்கும் மேலாகும். அவன் என்னிடம் உளறிக் கொட்டும் கொச்சைச் காட்டு மொழி வேத மந்திரங்களைவிட மதுரமாக உள்ளன. அவனுடைய அன்பை நாளைக்கு உனக்குக் காட்டுகிறேன். நாளைய தினம் நீ சந்நிதியில் ஒரு மரத்தருகே ஒளிந்திருந்து நடப்பவைகளைப் பார் — 'நான் அந்த வேடனைப் பற்றிச் சொன்ன பெருமையெல்லாம் சிறுத்துப் போகும்படி அவன் அன்பு செலுத்துவதைக் கண்ணுக்கு மெய்யாகக் காண்பாய்'' என்று கூறி மறைந்தார் பரமசிவனார்.

சிவகோசரியார் பேரானந்தம் கொண்டார். ''வேடனின் மகிமையாலன்றோ இன்று எனக்கும் ஸ்வாமியின் சொப்பன தரிசனம் வாய்த்தது!'' என்று அகமகிழ்ந்தார். மறு நாள் விடிவதற்கு ஆவல் துடிப்புடன் காத்திருந்தார்.

விடிந்தவுடன் குடுமித் தேவர் சந்நிதிக்குச் சென்று மரத்தின் பின் மறைந்து கொண்டார் சிவகோசரியார்.

(தொடரும்)

The following particulars regarding the ownership of 'GOKULAM', the Tamil fortnightly newspaper, are published as called for by Rule 8 of the Registration of Newspapers (Central) Rules, 1956.

FORM IV

1. *Place of publication :* Madras
2. *Periodicity of its publication :* Fortnightly
3. *Name of Printer :* I. Vaidyanathan
   Nationality : Indian
   Address : 1-A/2, Tank Road, Nungambakkam, Madras-600 034
4. *Name of Publisher :* V. Murali
   Nationality : Indian
   Address : 29/C, Santhi Colony, Anna Nagar, Madras-600 040
5. *Name of Editor :* K. R. Athmanathan
   Nationality : Indian
   Address : 20, Dr. Guruswami Mudaliar Road, Chetput, Madras-600 031
6. *Names and addresses of individuals who own the newspaper and partners or shareholders holding more than one per cent of the total capital :*

Bharathan Publications Pvt. Ltd., 20, Dr. Guruswami Mudaliar Rd., Madras-600 031

V. MURALI
Publisher

1 - 3 - 75



பெட்ரோல் கட்டிகள்!

அபாயம்

பெட்ரோல் நமக்கு ஏராளமான துறைகளில் பயன்பட்டாலும் அது எளிதில் தீப்பற்றிக்கொள்ளக் கூடியது. இதனால் அது மிகவும் அபாயகரமான ஒரு பொருளாகக் கருதப்படுகிறது. பெட்ரோல் எளிதில் தீப்பற்றுவது இருக்கவும் இப்போது விஞ்ஞானிகள் ஒரு புதிய முறையைக் கண்டறிந்திருக்கிறார்கள். பெட்ரோலைக் கட்டியாக்கி உபயோகிக்கலாம் என்பதே அது. இந்தப் பெட்ரோல் கட்டிகள் எளிதில் தீப்பற்றக் கூடியவை அல்ல. அப்படிப் பற்றினாலும் கூட மிக மெதுவாகத் தீவிரம் எதுவும் இல்லாமல் எரியும். இதனால் அதை அணைப்பதும் எளிதாகும்.

தேன் கூடு

தேன் ஒரு திரவப் பொருள். ஆனால் தேன் கூட்டில் அது இருக்கும்போது திடப் பொருளைப் போல் அதை நாம் கையாள முடிகிறது. எங்கும் எளிதாக எடுத்துச் செல்ல முடிகிறது. தேன் கூட்டில் உள்ள நுண்ணிய அறைகளில் திரவ உருவில் உள்ள தேன், துளிகளாகத் தங்கி யிருக்கிறது. கூட்டை நசுக்கினால் அல்லது பிழிந்தால் தேன் வெளியே வருகிறது. தேன் கூட்டில் திரவத் தேன் எவ்விதம் உள்ளதோ, அதே போல்தான் பெட்ரோல் கட்டிகளில் பெட்ரோல் உள்ளது. அதில் உள்ள பெட்ரோல் உறைந்து கட்டிகளாக மாறிவிடுவதில்லை.

எமல்சிஃபையர்


கட்டிகளாக்க வேண்டிய பெட்ரோலை ஒரு பாத்திரத்திலிட்டு அதோடு எமல்சிஃபையர் சேர்த்து இரண்டையும் குலுக்க வேண்டும். இப்படிக் குலுக்கும்போது பெட்ரோல் துளிகளைச் சுற்றி எமல்சிஃபையர் கவசம் போல் மூடிக் கொண்டு விடும். இந்தக் கவசம் பெட்ரோல் துளிகள் ஒன்றோடொன்று சேராது தடுத்து விடுகிறது. அதோடு பெட்ரோல் ஆவியாகிப் போய்விடாமலும் தடுத்து விடுகிறது. ஆனால் இந்த எமல்சிஃபையர் ஒரு திடப் பொருள் அல்ல. ஆகவே அதைத் திடப்பொருள் ஆக்குவதற்காக அதோடு பார்மலின் சேர்க்கப் படுகிறது. அப்போது எமல்சிஃபையர் சுருங்கிக் கெட்டித் திடப் பொருளாக மாறுகிறது. இப்படி மாறும்போது அதில் நுண்ணிய ஏராளமான துவாரங்கள் உண்டாகின்றன. இந்தத் துவாரங்களில் பெட்ரோல் புகுந்துகொள்ளுகிறது. இவ்விதம் பெட்ரோல் தேன் கூட்டில் தேன் உள்ள நிலையை அடைகிறது. இந்த நிலையில் அதை எங்கும் திடப் பொருள் போல எடுத்துச் செல்லலாம். தண்ணீருக்குள்ளும் கூட வைத்திருக்கலாம்.

ரஷ்யர்

இவ்விதம் பெட்ரோல் கட்டிகள் தயாரிக்கும் முறையை முதன் முதல் கண்டறிந்தவர் ரஷ்ய விஞ்ஞான அகாதமியைச் சேர்ந்த எரிபொருள் விஞ்ஞானப் பிரிவு விஞ்ஞானி பேராசிரியர் போலிஸ் வீ சோவ் என்பவர்.

பெட்ரோல் கட்டிகள் மூலம் நாம் பெட்ரோலின் நன்மைகளை யெல்லாம் எப்போதும் போல் பெறலாம். அதே நேரத்தில் பெட்ரோலால் ஏற்படும் தீ விபத்துக்களைத் தடுத்துக் கொண்டு விடலாம். ஆகவே இந்தப் பெட்ரோல் கட்டிகள் நமக்கு ஒரு வரப்பிரசாதம் போன்றது என்றால் அது மிகையாகாது.

அ. ராம்கோபால்



வாடா மலர்

கர்மம் செய்யாமையாலேயே முக்தி வரும் என்றால் தாவரப் பொருள்கள் முக்தி பெற வேண்டுமே! — ஸ்ரீ மத்வாச்சார்யர்

காதுக்கு அழகு நல்ல விஷயங்களைக் கேட்பதே யொழியக் குண்டலம் அன்று.
கைக்கு அழகு தானமே ஒழியக் கங்கணம் அன்று.
கருணையே நிறைந்த சரீரம் பரோபகாரத்தாலேயே பிரகாசிக்கின்றது. சந்தனம் பூசுவதாலன்று. — பர்த்ருஹரி

சரியான வேளையில் சரியான வேலை...



49F-203R-TAM



நீலக் கடல் தரையில்...

சந்திரன்

பலப்பல ஆண்டுகளுக்குப் பின்னல், ஒருநாள் காலையில் சூரியன் அழகாக உதித்து வந்தது. கடலுக்கடியில் வெளிச்சம் சிறிது சிறிதாகப் பரவியது. மீன்களில் சில பொன்போல் மின்னின.

அப்பொழுதுதான் ராமன் கண்விழித்தான். தன்னுடைய கடலுடுப்பை மாட்டிக் கொண்டு வீட்டுக்கு வெளியே வந்தான். அவனைக் கண்டதும் பல மீன்கள் ஓடி ஒளிந்து கொண்டன.

அவனுடைய எடைக் கருவியைப் பார்த்தான். பிறகு தன் எடையைச் சிறிது கூட்டிக் கொண்டான். இப்பொழுது அவனல் நன்ருக நிற்க முடிந்தது. கடலுக்கடியில் அவனுக்குப் பல நண்பர்கள் இருந்தார்கள். அவர்களுடைய தாய், தந்தையரெல்லாம் கடலுக்கடியில் குடியேறிப் பல பாதுகாப்பு வீடுகளைக் கட்டியிருந்தார்கள்.

முதலில் கடலில் குடியேற மிகவும் பயந்தார்கள். அப்பொழுது ராமனின் மாமாதான் தைரியம் சொன்னர். "நாமெல்லாம் வெளியே வசித்தாலும், அதுவும் ஒரு கடல்தான். இது நீர்க் கடல் என்ருல் வெளியே இருப்பது காற்றுக் கடல். இங்கே நீர் நிரம்பி யிருப்பது போல வெளியே காற்று நிரம்பி இருக்கிறது" என்று பலவாறு தைரியம் சொல்லி அவர்களைக் கடலுக்கடியில் அழைத்து வந்தார்.

ராமன் இதை யெல்லாம் நினைத்தபடியே நடந்து சென்ருன். அவனைச் சுற்றிப் பலநூறு மீன்கள் அலைந்து கொண்டிருந்தன.


சிறிது தூரத்தில் அவனுடைய நாய் டைகர் நின்று கொண்டிருந்தது. அதன் முகத்தில் சுவாசக் கூடு மாட்டியிருந்தது. அது தெரியாமல் டைகர், மீன்களைப் பிடிப்பதற்காகத் தாவிக்கொண்டிருந்தது பார்ப்பதற்கு வேடிக்கையாக இருந்தது, இதைப் பார்த்த ராமன், விழுந்து விழுந்து சிரித்தான்.

இதற்குள் அவன் மாமா அங்கே வந்தார். அவரோடு ராமனின் தந்தையும் வந்திருந்தார். அவர்கள் இரவெல்லாம் தூங்கவே இல்லை. இரவு முழுவதும் வேட்டைக்காகப் போயிருந்தார்கள்.

ராமன், மாமாவிடம் இதைப் பற்றிக் கேட்டான்.

"நாமெல்லாம் ஒரு காலத்தில் காட்டில்தான் குடியேறினேம். அப்போது புலி, சிங்கம் போன்ற மிருகங்களால் நமக்குத் தொல்லையாக இருந்தது. அவைகளை வேட்டையாடிப் பயமில்லாமல் வாழ்ந்து வந்தோம். காடுகளை அழித்து நாடுகளாக்கினேம். அதுபோல் இங்கேயும் ஆபத்தும் தொல்லையும் தரும் பயங்கர மீன்கள் வசிக்கின்றன. அவைகளை வேட்டையாடித் தொலைத்து விட்டால், இன்னும் பல வீடுகளை அங்கங்கே கட்டலாம்" என்றெல்லாம் மாமா விவரித்தார்.

இதற்குள் சோமு அங்கே வந்தான். ஒரு கயிற்றில் கடல் பர்சிகளைக் கட்டாகக் கட்டி இழுத்து வந்தான்.



முள்ளிருக்கு ரோஜாவிலே, தள்ளி நில்லு என்று சொன்னால்
எள்ளி நகை செய்திடுவார், துள்ளி ஓடிப் பறித்திடுவார்
கள்ளியிலே பாலிருக்கும் கிள்ளிவிட்டால் துள்ளிவரும்
அள்ளியதைப் பருகிடவே ஆருமில்லை பாரினிலே !

வண்ணப்படம்: வித்யாவ்ரதா



அவைகளைக் கொண்டு போய் மாடுகளுக்குப் போடுவான்.

ராமனின் உயிர் நண்பன் சோமு.

சோமுவைக் கண்டதும் ராமன் ஓடிப் போய் அவனோடு சேர்ந்து கயிற்றை இழுத்தான். ஒரு வண்டி பாசி இருக்கும். ஆனால் தண்ணீருக்குள் எடை மிகவும் குறைவாக இருந்தது. இதே பாசியை வெளியே இழுத்துச் செல்ல ஒரு வண்டி வேண்டும், இரண்டு மாடுகளும் வேண்டும். இங்கு அந்தத் தொல்லை இல்லை. இந்த விந்தையை நினைத்துக் கொண்டே ராமன் உற்சாகமாக இழுத்துச் சென்றான்.

இதற்குள் டைகருக்கு மாட்டியிருந்த எடைக் கருவி கோளாறாகி விட்டது. அதனால் எடை குறைந்து, நீருக்கு மேல் வந்து விட்டது. இதைக் கண்ட ராமன், பாசிக்கட்டை விட்டு விட்டு நகர்ந்தான். தன்னுடைய எடையையும் குறைத்துக் கொண்டு நீருக்கு மேலே வந்தான். பிறகு, டைகரின் எடைக் கருவியைச் சரிபார்த்தான். முடியவில்லை. உடனே டைகரை அணைத்துக் கொண்டு தன்னுடைய எடையைக் கூட்டினான். மெதுவாகக் கீழே வந்து, கடல் தரையில் நடந்து வீட்டுக்குள் போய் விட்டான்.

அவர்கள் வீடு மிகவும் அழகானது. பாதுகாப்பானது. உள்ளிருந்தே, கடலையும், அதில் அலையும் மீன்களையும் வேடிக்கை பார்க்கலாம்.

சில சமயம் நீர்மூழ்கிக் கப்பல் வரும். அவைகள் வீட்டை நெருங்கிப் போகும் பொழுது வீட்டுச் சுவரில் அலைகள் வந்து அழகாக மோதும்.

காற்று வெளியில் விமானம் புகுந்து பறப்பது போல் கடல் வெளியில் நீர் மூழ்கிக் கப்பல்கள் போன வண்ணமாக இருக்கும்.

ராமனின் நண்பன் சோமு, மாடுகளுக்குப் பாசியைப் போட்டு விட்டு வந்தான். சோமு பல சுவையான கதைகளை ராமனுக்குச் சொல்வதுண்டு. அதனால், சோமுவை வீட்டுக்குள் அழைத்து வந்த ராமு, கதை சொல்லும்படி கேட்டான்.


சோமு சுவாரஸ்யமாகக் கதை சொல்லத் தொடங்கினான். திமிங்கிலத்தில் அவன் தாத்தா சவாரி செய்ததாகச் சொன்னான். திமிங்கிலச் சவாரிப் போட்டியில் அவன் தாத்தாவின் திமிங்கிலம் தான் முதலில் வந்ததென்றும் கதை சொன்னான். அன்று கடலடியில் பெருந் திருவிழாவும் விருந்தும் நடந்தனவாம். இதையெல்லாம் கேட்டு ராமன் தன்னையே மறந்து போனான்.

திடீரென்று அப்பா உரக்கக் கூப்பிடுவதுபோல் கேட்டது. ராமன் திடுக்கிட்டுப் பார்த்தான். ''ஏண்டா சோம்பேறி! புத்தகத்தை விரித்து வைத்துக் கொண்டு தூக்கமா? படிக்கிற லட்சணம் நன்றாயிருக்கு'' என்று அப்பா சத்தம் போட்டார்.


அப்போதுதான் இவ்வளவு நேரமும் தான் வாழ்ந்த உலகம் கனவு உலகம் என்பது புரிந்தது. 'நாம் ஒரு காலத்தில் கடலினடியில் வாழ்வோம்' என்ற ஒரு புத்தகத்தைப் படித்ததன் விளைவுதான் அந்தக் கனவு என்பதும் புரிந்தது.



சமையலுக்குப் பெருந்துணை
ஓய்வில்லா தாய்மார்கள் சுவையான சமையல் செய்ய சுலபமான வழி! இந்த 3 பெருந்துணைகளைப் பின்பற்றி, பல்வேறு இன்பமூட்டும் தின்பண்டங்களைத் தயாரித்து மகிழுங்கள்!......
பிரவுன் & போல்ஸன்
வெரய்ட்டி கஸ்டர்டு பவுடர்
6 இனிமையான சுவை வகைகள்! குடும்பத்தினரை மகிழ்விக்க புடிங், பாயசம், ரபடி ஆகிய பல்வேறு இன்சுவையுள்ள பண்டங்கள் தயாரிக்க சாலச் சிறந்தது.
Brown & Polson
Brown & Polson Cornflour
பிரவுன் & போல்ஸன்
கார்ன்ஃப்ளவர்
கபாப், சமோசா, பட்டீஸ் ஆகியவற்றை அதிமெல்லியதாகவும் மொரமொரப்பாகவும் ஆக்குகின்றது. குழைவான சுவைமிகு சூப், கிரேவி ஆகியவற்றைக் கெட்டியாகத் தயாரிக்க உதவுகிறது.
REX BAKING POWDER
ரெக்ஸ்
பேகிங் பவுடர்
கேக், பிஸ்கோத்து, பக்கோடா, பூரி, குலாப் ஜாமூன் ஆகியவற்றை சுவைபட அதிமென்மையாகத் தயாரிக்க உதவுகிறது. சிறிதளவே சிறப்பாகச் செய்து முடிக்கிறது!
உங்கள் சமையல் உன்னதமாய் இருக்க உயர்ந்த சாமானையே உபயோகியுங்கள்
பிரவுன் & போல்ஸன் மற்றும் ரெக்ஸ்
தரமுயர்ந்த தயாரிப்புகள்
அருமையான பொருள்களிலிருந்து மிகுந்த கவனத்தோடு பக்குவப்படுத்தப்பட்டவை—கிடைப்பனவற்றிலேயே சிறந்தவை.
கார்ன் பிராடக்ட்ஸ் கோ. (இந்தியா) பிரைவேட் லிட்.
ஸ்ரீநிவாஸ் ஹவுஸ், எச். ஸோமானி மார்க், பம்பாய் 400 001.
OBM 3886 TM


நானா புளுகன்? உண்மையையே சொன்னேன். ஆனால் இது எனக்கும் என் அன்னைக்கும் மட்டுமே தெரியும். இன்று ஏனோ உங்களைப் பார்த்ததும் இந்த ரகசியத்தைக் கூறிவிட்டேன்.
உன் அன்னையா? யார் அவள்?
ஜெய் ஹனுமான் (32)
கதை: ரா. கணபதி
சித்திரம்: விஜு
மீன் வடிவிலுள்ள ராட்சஸி, முன்பு மாருதி சீதாதேவியைப் பார்த்துவிட்டுக் கடல் மார்க்கமாகத் திரும்பும்போது தமது வியர்வையை வழித்துக் கடல் நீரிலே விட்டாராம்.
அதைக் கடலிலிருந்த மீனரக்கியான என் தாய் உண்ணவே, நான் பிறந்தேன்.
பிறக்கும்போதே வாலிபனாகப் பிறந்த என்னை, என் தாய் இராவணன் மைராவணனிடம் வேலைக்கு அமர்த்தினாள்.
அப்படியா? ஒரு விதத்தில் நீ என்னைத் தந்தையாக மதிப்பது நியாயம் தான்.
தன் முன்னால் நிற்பவரே தன் தந்தை என்பதறிந்த மகரத்துவஜன் ஆனந்தக் கூத்தாடுகிறான்.
அனுமன் தான் வந்த காரியத்தை விளக்குகிறார்.
பிதாவே! மாய அரக்கர்களை நாமும் தந்திரத்தாலேயே வெல்ல வேண்டும். சொல்கிறபடி செய்யுங்கள்.
மகரத்துவஜன் தன் திட்டத்தை விளக்கி அவரைக் காளிகோயிலுக்கு அழைத்துப் போகிறான்.
இந்தக் காளிசிலையின் பின்னால் ஒளிந்து கொள்ளுங்கள். நான் கதவைத் தாளிட்டு விடுகிறேன்.
மற்றபடி நான் சொன்னது நினைவிருக்கட்டும்.


மறுநாள் காலையில் ராமலட்சுமணர்களைப் பலி கொடுக்க அஹி, மஹி ராவணர்கள் காளி கோயிலுக்கு வருகின்றனர்.
கதவைத் திறக்காதீர் என் தீட்சண்யத்திலே நீங்கள் தீய்ந்து கருகிப் போவீர்கள்.
காளி சிலையின் பின்னாலிருந்து அனுமன் காளி பேசுவதுபோலவே பேசுகிறார். அரக்கர் பீதியடைகின்றனர்.
அன்னையே எங்களைப் பொசுக்கும்படிக்கு தங்களுக்கு ஏற்பட்ட கோபம் ஏனோ?
எத்தனைக் காலமாக நான் பசியோடும் ரத்த தாகத்தோடும் இருக்கிறேன்! இந்தப் பசியில் உங்கள் எல்லோரையும் சுபளீகரம் பண்ணி விடுவேன். ஆகவே கதவைத் திறக்காமலே முதலில் சாளரத்தின் வழியே பழங்கள் தேன் முதலிய சைவ உணவுகளை நிறைய அனுப்புங்கள்.
முதலில் அவற்றை உண்டு என் அகோரப் பசியைச் சமனப் படுத்திக் கொள்ளுகிறேன். பிறகு நரபலியாக ராம லட்சுமணர்களை ஏற்கிறேன். ஆனால் அவர்களைக் கட்டி வைத்து வெட்ட வேண்டாம்.
அந்த நரர்களை வீர பலியாக ஏற்கப் போகிறேன். ஆகவே அவர்களுக்கு வில்லும் அம்பும் தந்து உள்ளே தள்ளி விடுங்கள். சிறிது நேரம் அவர்களுடன் போர் விளையாட்டு விளையாடி விட்டுப் பிறகு புசிப்பேன்.
அப்படியே ஆகட்டும் தாயே! உன் விருப்பப் படியே செய்கிறோம்.
தொடரும்




புத்தியுள்ள நரி

காட்டில் சிங்கம் ஒன்றுகடும்
காய்ச்சல் என்றே பொய்சொல்லி
வாட்டம் உற்றது போலிருக்க...
வந்தது சிட்டுக் குருவியங்கே!
'அய்யோ பாவம்!' என்றெண்ணி
அந்தச் செய்தியைக் காடெல்லாம்
சொன்னது. இதனைக் கேட்டவுடன்
சென்றன ஆங்கே மிருகமெலாம்!

பச்சிலை யுடனே மானொன்று
''பாவம் யாதோ நிலை?'' என்றே
பார்த்திட வந்தே கேட்டதுவாம்,
பகர்ந்தது சிங்கம், ''மாண்டிடுவேன்
மீள்வது கடினம்'' என்றதுவாம்.
''மீண்டிட இதனைப் புசி''என்றே...
பச்சிலை அதனைக் கொடுத்திடவே
பக்கலில் வந்த மானின்மேல்...
பாய்ந்தது சிங்கம் கொன்றதுவாம்
பசிதனைப் போக்கிக் கொண்டதுவாம்!

அந்தச் சிங்கம் தனைப்பார்க்க
அறிவு இல்லா ஆடொன்று
''காய்ச்சல் நிலைமை யாதென்றே
கேட்டிடச் சிங்கம் சொன்னதுவாம்,
''இயலா நிலையே ஓரிருநாள்
'இரையே வேண்டாம்', என்றிருந்தால்
எல்லாம் இதமாய்ப் போய்விடுமே
எனினும் நாடியைப் பார்த்திடவே
குகையின் உள்ளே வா'' என்றே
கூப்பிட ஆடும் ஓரடியை
வைத்தது முன்னே- சிங்கமுமே
வேகமாய்ப் பாய்ந்து கொன்றதுவே!

சிங்கம் இப்படித் தினந்தோறும்
சடுதியில் ஒவ்வொரு மிருகமென
கொன்றே தின்று வரும்போது
குள்ள நரியும் வந்ததுவாம்!
''எப்படி உள்ளீர்? யாரிடமே
என்ன மருந்து அருந்துகிறீர்?''
என்றிடச் சிங்கம் சொன்னதுவாம்,
''என்னுடல் மிகவும் நலம், ஆனால்





பேசிடத் துணைவன் இல்லாமல்
பெரிதும் துன்பம் அடைகின்றேன்.
பக்கம் வந்தே அமர்ந்திடுவாய்
பேசிப் பொழுதைப் போக்கிடலாம்!''


சிங்கம் இப்படிக் கூற,பதில்
சொன்னது நரியும் தந்திரமாய்,
''இல்லை இல்லை உம்நிலைமை
இன்னும் சரியாய்ப் போகவில்லை
'கர கர' என்றே பேசுகிறீர்!
குரலில் கடுமை தணியவில்லை
பெரிதும் நோயால் வாடுகிறீர்!
பேசினால் இறப்பீர் பேசாதீர்!
நல்ல வைத்தியர் உடனே நான்
நொடியில் வருவேன்'', என்றநரி...
ஓரடி பின்னால் வைத்திடவே
உடனே சிங்கம் ''வைத்தியரா!
வேண்டாம். இப்போ நீவாராய்
நாவினை நாடியைப் பார்த்திடுவாய்
பின்னரும் வைத்தியர் தேவையென்றால்
போகலாம்'' என்றே சொன்னதுவாம்!

அதனைக் கேட்ட நரியாரும்
''அய்யா, உமது குகைக்குள்ளே
காலடிச் சுவடு தெரிகிறதே
காரணம் எதுவோ?'' என்றதுவாம்!
அதுவா என்னைக் கண்டிடவே
அன்புடன் குரங்கு. மான்,ஆடு
கரடி, ஓநாய், கருங்குரங்கு
களிப்புடன் வந்தன'' என்றதுவாம்!
கேட்டது நரியும் ''அப்படியா,
கேள்வி இதற்குப் பதிலென்ன?
அத்தனை சுவடும் உள்நோக்கி
அழுந்தி இருக்க ஒன்றேனும்
வெளியே வந்த சுவடில்லை!
வேண்டாம் இந்த வம்பெனக்கு''
என்றே நரியும் தப்பியதாம்!
இதனால் அன்புக் குழந்தைகளே!
'புத்தி ஒன்றே பலம்' என்ற
பாடம் தனையே அறிவீரே!''

(ஈசாப் கதையைப் பாடல் ஆக்கியவர்:
மன்னை ஜானு)



உங்களுடைய பார்சல்கள் எங்களுடைய வாழ்வு.



எனவேதான் உங்கள் பார்சல்களைப் பத்திரமாகவும், குறித்த நேரத்திலு[illegible], ஒழுங்காகவும் கொண்டு சேர்க்கிறோம்.

எப்படி என்று கேட்கிறீர்களா?

வேகமாக: ஓர் இடத்திலிருந்து மற்றோர் இடத்துக்கு நேரிடையாகச் செல்லும் பார்சல் சர்வீஸ் இருப்பதனால் உங்கள் பார்சல்கள் வழியில் ஏற்றி இறக்கப்படுவதில்லை. மேலும் எங்கள் லாரிகள் அனைத்தும் எங்களுக்குச் சொந்தமானவை. எனவே காத்திருக்கத் தேவையில்லை. டிரெய்லர்களும் நிறைய இருப்பதால், அதிக பார்சல்களை விரைவில் ஏற்றிச் செல்ல முடியும். இவை தவிர, மின்னல்வேக சர்வீஸ்களும் உண்டு. வண்டிகள் நடுவழியில் பழுதடைந்தால், உடனடியாகச் செப்பனிட பட்டறைகளையும் நிறுவியிருக்கிறோம்.

பத்திரமாக: எங்கள் டிரைவர்கள் அனைவரும் திறமைசாலிகள். அவர்களை அவ்வப்போது சோதனைகளுக்கும் உட்படுத்துகிறோம். அபாயம் இருக்கக் கூடிய நள்ளிரவு நேரங்களில் வண்டி ஓட்ட அனுமதிப்பதில்லை. மேலும் எங்களது ஏற்றி-இறக்கும் பணியாட்கள் அனுபவம் மிகுந்தவர்கள். உங்கள் பார்சல்களை பூப்போல கையாளக் கூடியவர்கள். எனவே பார்சல்கள் பத்திரமாகப் போய்ச் சேர்கின்றன.

ஒழுங்காக: எங்கள் ஊழியர்கள் நன்கு பயிற்சி பெற்றவர்கள். அனுபவசாலிகள். திறமையுடன் பணியாற்றுவதையே லட்சியமாகக் கொண்டவர்கள். இன்முகமும், புன் சிரிப்பும், இணையற்ற செயல் திறனும் இணைந்தவர்கள்.

இப்படித்தான் 60 ஆண்டு காலமாக உங்களுக்குத் தொண்டாற்றி வருகிறோம். இனியும் தொடர்ந்து பணி புரிவோம்.

TVS உங்கள் நம்பிக்கைக்கு உரியது டிவிஎஸ்

ஸதர்ன் ரோட்வேஸ் பிரைவேட் லிமிடெட், மதுரை

(டிவிஎஸ் தொகுப்பைச் சேர்ந்த நிறுவனங்களில் ஒன்று)



FDS SR 2008 TAMA

நீங்களும் மந்திரவாதியாகலாம்

மந்திரவாதி கிட்டு அன்று வரவில்லை. அவன் ஏதோ காரியமாகக் கடைக்குப் போயிருந்தான். அவன் தங்கை பட்டு மட்டுமே வந்திருந்தாள். பட்டுவும் அவள் அண்ணனைப் போலவே பலே சாமர்த்தியக்காரிதான். ''கிட்டு வரலேன்னு முகம் தொங்கிப் போச்சா உங்களுக்கு?'' என்றாள் பட்டு.

''அதெல்லாமில்லை. நீதான் பட்டுக்குட்டி. வந்திருக்கியே உன் சாமர்த்தியத்தை இவர்களுக்குக் காட்ட வேண்டாமா?'' என்றாள் ஸரஸா.

''உமா, உன் சரியான வயதை நான் சொல்லி விடுகிறேன், சரிதானே ?'' என்றாள் பட்டு. ''ஒரு காகிதத்தில் நீ உன்னுடைய வயதை எழுதிக்கொள்'' என்றாள் பட்டு. உமாவும் அப்படியே செய்தாள். (வயது 11)

''அதை மூன்றால் பெருக்கு.''

''பெருக்கினேன்'' ($11 \times 3 = 33$)

''அத்துடன் எண் ஆறைக் கூட்டிக் கொள்.''

''கூட்டிக் கொண்டேன். ($33 + 6 = 39$)

''வந்த விடையை மூன்றால் வகு.''

''சரி வகுத்துவிட்டேன்''($39 \div 3 = 13$)

''வகுத்துள்ள ஈவைக் கூறு'' என்றாள் பட்டு. உமா சொன்னாள். அடுத்த விநாடியே பட்டு ''உன் வயது பதினொன்று?'' என்றாளே பார்க்கலாம்.

''எப்படி இத்தனை கரெக்டாகச் சொன்னாய்?'' என்று குதித்த தோழிகளுக்குப் பட்டு அந்த ரகசியத்தைக் கூறினாள். ''மூன்றால் வகுத்து வரும் ஈவிலிருந்து இரண்டைக் கழித்து வரும் விடைதான் கணக்குப் போடுபவரின் வயதாக இருக்கும். அவர் எத்தனை வயதானவரானாலும் சரி!''

கோமதிக்கு ஆசை, தன் வயதையும் பட்டு சொல்ல வேண்டும் என்று. ஆனால் அவள் குறும்புக்காரி. தன் அம்மாவின் வயதைத் தன் வயதாக நினைத்துக் கொண்டு காகிதத்தில் எழுதிக்கொண்டாள். ''பட்டு என் வயதை நீ சொல்லு பார்க்கலாம்'' என்றாள்.

கோமதி ஏதோ குறும்பு செய்ய நினைப்பதை ஊகித்துக் கொண்ட பட்டு, ''கோமதி, உன் வயதை வேறு ஒரு முறையில் சொல்லுகிறேன். முதலில் கூறியபடியும் சொல்ல முடியும். இது வேறொரு முறை. வயதை எழுதிக் கொண்டாயா?'' என்றாள்.

''ஓ...ரெடி'' என்றாள். அவள் எழுதிக் கொண்டது அவள் அம்மாவின் வயதை. — 35.

''அதை இரண்டு மடங்காக்கு.''

''ஆக்கினேன்'' ($35 \times 2 = 70$).

''அத்துடன் ஒன்றைக் கூட்டிக் கொள்.''

''சரி. கூட்டியாயிற்று'' ($70 + 1 = 71$)

''வந்த விடையை ஐந்தால் பெருக்கு''

''பெருக்க வேண்டுமா ? சரி— ($71 \times 5 = 355$).

''அத்துடன் ஒரு ஐந்தைக் கூட்டிக் கொள்.''

''அது வேறேயா? சரி, கூட்டியாயிற்று'' ($355 + 5 = 360$).

'' அதை மறுபடியும் பத்தால் பெருக்கு.''

''அட ராகவா! முடியவில்லையா இன்னும் ? சரி. பெருக்கினேன்.'' ($360 \times 10 = 3600$).


''விடையைக் கூறு'' என்றாள் பட்டு.

''மூவாயிரத்து அறுநூறு'' என்றாள் கோமதி.

''உன் அம்மாவின் வயது முப்பத்தைந்தா?'' என்று பட்டு கேட்டதும், ''ஆ!'' என்ற கோமதியின் விழிகள் விரிந்தன.

''ஏன் திகைக்கிறாய்? ரகசியம் தெரிய வேண்டுமா ? கடைசியில் கிடைத்த விடையிலிருந்து 100ஐக் கழித்து வரும் விடையின் கடைசி, இரு இலக்கங்களை ஒதுக்கினால் மீதம் இருப்பது எழுதுபவரின் வயதாக இருக்கும்.''

''கிட்டுவை விடப் பட்டு பலே கைக்காரியாக இருக்கிறாளே!'' என்றனர் தோழிகள்.



சாது கோபு

ஆர். புருஷோத்தமன்




கோபு என்ற பெயருள்ள ஒரு பையன் இருந்தான். அவன் யாருடைய பேச்சையும் கேட்க மாட்டான். அப்பாவுக்கு அடங்க மாட்டான். அம்மாவை அடக்குவான். இதனால் அவனை ''அடங்காப் பிடாரி கோபு'' என்றுதான் கூப்பிடுவார்கள். அவனிடம் தப்பித் தவறி யாராவது ஒரு வேலை செய்யச் சொல்லி விட்டால் போதும். சிடுசிடுவென்று அவனுக்கு மூக்கின்மேல் கோபம் வந்து விடும். அவன் வேலையைக்கூட அவனே செய்து கொள்ள மாட்டான். தான் வேலை செய்வதை மட்டுமல்லாது வேலை செய்யும் மற்றவர்களையும் இழிவாகவே கருதினான் அவன்.

ஒரு நாள் கோபுவின் வீட்டுக்கு விருந்தினர்கள் வந்திருந்தனர். அதனால் சில பொருட்கள் அவசியமாகத் தேவைப்பட்டன. அவனது அப்பா அலுவலகத்துக்குச் சென்றிருந்தார். எனவே கோபுவின் தாய் அவனை அன்பாக அழைத்துக் கடைக்குச் சென்று, தேவையான பொருட்களை வாங்கி வரச் சொன்னாள். கோபுவோ வழக்கம் போலப் போக முடியாது என்று சொல்லி விட்டான். அவனது தாயார் எவ்வளவோ மன்றாடிக் கேட்டுக் கொண்டும் அவன் போக மறுத்து விடடான். எனவே கோபமடைந்த அவன் தாயார் அவனுக்குச் செம்மையாக அடிகொடுத்துக் கடைக்குப் போகச் செய்தாள்.

அடி வாங்கிய கோபுவுக்கு அழுகையும் ஆத்திரமும் பீறிட்டுக் கொண்டு வந்தன. அம்மாவிடம் பையையும் பணத்தையும் வாங்கிக் கொண்டு கடையை நோக்கிச் சென்றான். பாதி தூரம் கூடச் சென்றிருக்க மாட்டான். அவன் மூளையில் திடீரென்று ஓர் எண்ணம் தோன்றியது.


''ஒரு தடவை வேலை செய்தால் எப்பொழுதுமல்லவா வேலை வைப்பார்கள். செய்யா விட்டால் செம்மையாக உதை வேறு கிடைக்குமே. இதிலிருந்து எப்படித் தப்புவது?...ம்...இதுதான் சரியான வழி. இவர்களை யெல்லாம் விட்டு விட்டுப் போய் விட்டால் எவ்வளவு நன்றாக இருக்கும்? ஒரு வேலையும் செய்ய வேண்டியதில்லை'' —இப்படி எண்ணமிட்ட கோபு ஒரு மர நிழலில் உட்கார்ந்தான். ''இந்த வெய்யிலில் இந்த மர நிழல்தான் எவ்வளவு சுகமாக இருக்கிறது'' என்று தனக்குள்ளேயே கூறிக் கொண்டான்.

கோபு மெல்ல எழுந்து நடக்கலானான். ஆனால் கடையை நோக்கிச் செல்லவில்லை. அடர்த்தியாக இருந்த காட்டை நோக்கி நடக்க ஆரம்பித்தான்.



அந்தக் காட்டில் பெரிய பெரிய மரங்கள் நிறைய இருந்தன. ஒவ்வொரு மரமும் மேகங்களைத் தொடுவது போல் வளர்ந்திருந்தது. உள்ளே செல்லச் செல்ல இருட்டு அதிகமானது. அசட்டுத் துணிவுடன் உள்ளே சென்று விட்டாலும் அவனுக்கு உதறல் எடுக்கலாயிற்று. இருட்டு அதிகமாக அதிகமாக அவனுக்கு அச்சமும் அதிகமானது. கடைசியில் திரும்பிச் சென்று விடலாம் என்று எண்ணிய கோபு பின்னால் திரும்பினான். எங்கும் மரங்கள் நிறைந்து அந்தக் கானகமே இருண்டு கிடந்ததால் அவனுக்குத் தான் வந்த வழியே மறந்து விட்டது.

பாவம் கோபு! இங்கும் அங்கும் ஓடினான். கத்தினான். கதறினான். ஆனால் யாரும் உதவிக்கு வர



வில்லை. இருட்டில் மரங்களின் மீது வேறு நன்றாக மோதிக் கொண்டான். அந்த வலி வேறு விண்விண்ணென்று வலிக்கத் தொடங்கியது. உடனே கோபு கீழே உட்கார்ந்து கொண்டு பலமாக அழ ஆரம்பித்தான். மரங்கள் மிக லேசாகச் சலசலத்தால்கூட அவனுக்குப் பேய்களே வந்து விட்டதைப் போலிருக்கும். மிருகங்கள் வேறு வந்து விட்டால் என்ன செய்வது என்ற எண்ணம் அவனை மேலும் பயத்தில் ஆழ்த்தியது.

அழுது அழுது அவன் கண்கள் இரண்டும் சிவந்து விட்டன. ஆனால் அவன் அழுகையைக் கேட்க யாரும் அங்கு வரவில்லை.

அப்பொழுது அந்தப் பக்கமாக வந்த வனதேவதை ஒன்று கோபுவின் அழுகை ஒலியைக் கேட்டது. எனவே சத்தம் வந்த திசையை நோக்கி வந்தது. கோபுவைக் கண்டது.

''ஏ, பையா! நீ யார்?'' என்று அந்தத் தேவதை கேட்டது.

''நான்தான் கோபு!'' என்று தேம்பியபடி பதில் சொன்னான் கோபு.

''நீ ஏன் இங்கு வந்தாய்?'' என்று அந்தத் தேவதை கேட்டது.



கோபு நடந்ததை யெல்லாம் ஒன்று விடாமல் அந்த வன தேவதையிடம் கூறினன்.

அந்த வனதேவதைக்குக் கோபுவின் மேல் கொஞ்சம் கோபம் வரத்தான் செய்தது. ஆனாலும் அவனது நிலைமைய எண்ணி அவன்மீது அநுதாபம் கொண்டது. எனவே அது கோபுவைப் பார்த்துக் கேட்டது: ''இந்த இடத்தை விட்டுப் போக விரும்புகிருயா?''

''ஆமாம்'' என்று கண்ணீரைத் துடைத்துக் கொண்டு கோபு பதில் அளித்தான்.

''அப்படியானல் கண்களை மூடிக் கொள்'' என்று அந்தத் தேவதை கட்டளை இட்டது. அப்படியே அவனும் தன் கண்களை மூடிக் கொண்டான். பிறகு அந்தத் தேவதை தன் கையிலிருக்கும் மந்திரக் கோலால் தரையை மெல்லத் தட்டியது. அந்த இடத்தில் பூமி சப்தமில்லாமல் திறந்து கொண்டது. அந்தத் தேவதை கோபுவை எடுத்துக் கொண்டு மெல்ல அந்தப் பிளவுக்குள் இறங்கியது.

''இனி கண்ணைத் திறந்து கொள்'' என்று அந்தத் தேவதை கூறியது.

கண்களைத் திறந்தான் கிட்டு. அவன் முன்னே காடு இல்லை. தேவதையும் இல்லை. அவனுக்கு ஆச்சரியமாக இருந்தது. அவன் ஒரு பெரிய நகரின் வீதியில் நின்று கொண்டிருந்தான். அங்கே மக்கள் சுறுசுறுப்பாக இயங்கிக்கொண்டிருந்தார்கள். கோபு அதற்கு முன் நகரம் எதையும் கண்டதில்லை. இதனால் வியப்புடன் அந்த நகரத்தின் தெருவையும், கடைகளையும், கட்டடங்களையும் பார்த்தான்.

சற்று நேரத்தில் கோபு தனக்குப் பசிப்பதை உணர்ந்தான். அவனுக்கோ அந்த நகரத்தில் யாரையும் தெரியாது. அந்தத் தேவதையோ மறைந்து விட்டது. கோபுவுக்கு என்ன செய்வது என்று தெரியவில்லை. பசியோ வயிற்றைக் கிள்ளியது. ''ம்... இப்போது வீட்டில் இருந்திருந்தால் எவ்வளவு நன்ருக இருக்கும்? எவ்வளவு அருமையான உணவு கிடைத்திருக்கும். வீட்டை விட்டு ஓடி வந்ததாலல்லவா இப்படிப் பட்டினியாகக் கிடக்க வேண்டி யிருக்கிறது'' என்று எண்ணினன்.

அப்போது எங்கிருந்தோ பலகாரம் செய்யும் வாசனை கோபுவின் மூக்கைத்




மனைவி: என்னங்க! இன்னைக்கு ஆபீஸ்-க்கு லீவு போட்டு விடுங்க.

கணவன்: என்ன விசேஷம்?

மனைவி: உங்க ஒரே வேட்டியிலேதான் குழந்தைக்குத் தூளி கட்டி யிருக்கேன்!

— ச. பழநியப்பன்



பாகவதர்: என் வீட்டை எப்படிக் கண்டுபிடிச்சீங்க?

சபா காரியதரிசி: உங்க பாட்டைக் கேட்டுத்தான்.

பாகவதர்: நான் இப்போ பாடவே இல்லையே!

சபா காரியதரிசி: உங்க மனைவியிடம் பாடிக் கொண்டிருந்த பஞ்சப் பாட்டைச் சொல்றேன்!

— ஆர். ராஜேந்திரன்



பையன் (கடைக்காரரிடம்): ஏங்க, இந்தப் புத்தகத்தைக் கொஞ்சம் சொல்லிக்... கொடுங்க.

கடைக்காரர்: இங்கு புத்தகம் விற்பனை மட்டும் தான் செய்யறது. சொல்லிக் கொடுக்கறதுக்கு வேறு ஆளைப் பாரு தம்பி!

— ச. பழநியப்பன்

தொட்டது. அவன் அந்த வாசனையை நன்ருக இழுத்துக் கொண்டான். பிறகு அந்த வாசனை வரும் திசையை நோக்கி நடக்கத் தொடங்கினுன். பல தெருக்களைக் கடந்து சென்ருன். கடைசியில் அந்த வாசனை எங்கிருந்து வருகிற தென்பதைக் கண்டுபிடித்து விட்டான்.

ஒரு வீட்டுக்குள்ளே ஒரு பாட்டி பல காரங்கள் செய்து கொண்டிருப்பதை ஜன்னல் வழியாகப் பார்த்தான். அந்த வாசனை அவன் நாவில் நீரை வரவழைத்தது. ''ஆஹா! என்ன அருமை!'' என்று கூறிக்கொண்டே அவனை அறியாமல் நாவைச் சுழற்றிச் சப்புக்கொட்டினுன். இது எப்படியோ அந்தப் பாட்டியின் காதுகளில் விழுந்து விட்டது.

அந்தப் பாட்டி தலையைத் திருப்பிக் கோபுவைப் பார்த்தாள். பிறகு அவனை உள்ளே வருமாறு கூப்பிட்டாள்.

கோபு உள்ளே சென்ருன். என்ன வேண்டும் என்று பாட்டி கேட்டாள். தனக்குப் பசியாக இருக்கிற தென்றும் பலகாரங்கள் சாப்பிடுவதற்கு வேண்டுமென்றும் கூறினுன். கூறியது மட்டுமல்லாமல் காசை வேறு எடுத்து நீட்டினுன்.

பாட்டி, கோபுவையும் அவன் கையிலிருக்கும் காசையும் பேராச்சரியத்துடன் மாறி மாறிப் பார்த்தாள்.

''ஏன் பாட்டி அப்படிப் பார்க்கிருய்?'' என்று கேட்டான் கோபு.

''இவ்வளவு காசும் உனக்கு எங்கே கிடைத்தது? நீயே உழைத்து வேலை செய்து சம்பாதித்தாயா?'' என்று கேட்டாள் பாட்டி.


கோபு ''இல்லை'' என்று தலையை ஆட்டினுன்.

''நீயே சம்பாதிக்காததை ந எப்படிச் செலவு செய்யலாம்? அதுகூட உனக்குத் தெரியாதா? உன்னைப்போலச் சின்னப் பையன்கள் எல்லாம் காசைத் தொடக்கூடாதென்று கூடத் தெரியாத முட்டாள் பையனு நீ?'' என்று கேட்டாள் பாட்டி.

''அதெல்லாம் எனக்குத் தெரியாது. எனக்குப் பசிக்கிறது'' என்ருன் கோபு.

''அப்படியானுல் எனக்குச் சின்ன வேலை ஒன்று செய். நான் உனக்குத் தேவையான சுவையான தின்பண்டங்களைத் தருகிறேன். எங்கே கொல்லைப் பக்கத்திலிருக்கும் விறகைக் கொஞ்சம்

சிரிக்கச் சிரிக்க





பாட்டி: ஏண்டி ருக்கு! நம்ம லட்சுமிக்கு முறுக்கு சுத்தத் தெரியுமோ?


ருக்கு: அவளுக்கு ஊர் சுத்தத்தான் தெரியும்!

— ஆனந்த் குமார்

தந்தை: நம்ம பையன் மார்க்கண்டன் மார்க்கெல்லாம் எப்படி சார்?

ஆசிரியர்: அந்த மார்க்கண்டன் என்றும் பதினாறு. உங்க மார்க்கண்டனும் எல்லாம் பதினாறு!

— பி. உதய செல்வம்



இளைஞன்: உங்க கடையிலே வாங்கின பனியன் நாளுக்கு நாள் நீண்டுகிட்டே போகுதே.

கடைக்காரர்: நான் அப்பவே சொன்னேனே சார். நம்ம கடை பனியன் 'நீண்டு' உழைக்கும்னு!

— எஸ். கண்ணன்

எடுத்து வா, பார்க்கலாம்'' என்றாள் பாட்டி.

இதைக் கேட்ட கோபுவுக்குப் பசி கூட மறந்து விட்டது. கோபம்தான் வந்தது.

''நான் ஒரு வேலையும் செய்ய மாட்டேன்'' என்று பட்டென்று பதில் சொன்னான் கோபு.

''அப்படியானால் சட்டென்று நடையைக் கட்டு'' என்று சொல்லிவிட்டாள் பாட்டி.

கோபுவும் கோபத்தோடு வெளியேறி விட்டான். அந்த நகரத்தின் தெருவில் கால் போன போக்கில் நடந்தான்.

அப்போது வீதியின் ஓரத்தில் ஒரு மனிதன் மண்பாண்டங்கள் செய்து கொண்டிருப்பதைக் கோபு கண்டான். கோபுவைக் கண்ட அந்த மனிதன் அவனைக் கூப்பிட்டுச் சொன்னான்:

''ஏன் தம்பி எந்த வேலையும் செய்யாமல் வெட்டியாய்ப் பொழுதைக் கழிக்கிறாய்? உன்னைப் பார்த்தால் பசியோடு இருப்பதாகத் தோன்றுகிறது. உனக்கு நான் உண்ண உணவு தருகிறேன். எனக்கு மண்பாண்டங்கள் செய்வதற்கு உதவியாக இருக்கிறாயா?''

'ஓஹோ! உன்னைப் போல மண்ணைப் பிசையும் குயவன் என்று நினைத்தாய்? இந்த மாதிரி வேலையெல்லாம் எனக்குச் செய்யத் தெரியாது. நான் செய்யவும் மாட்டேன்'' என்றான் கோபு.

''நீ மண்பாண்டங்கள் செய்யவேண்டாம். எனக்கு உதவியாக நான் கேட்பதை எடுத்துக் கொடுத்தால் போதும்'' என்றான் அந்த மனிதன்.

''நான் எந்த வேலையும் செய்ய மாட்டேன். வேலை செய்வதே இழிவானது. சும்மா இருப்பதே சுகமானது'' என்று கூறிய கோபு அதற்கு மேலும் அங்கே நிற்கவில்லை.

மேலும் கொஞ்ச தூரம் சென்ற கோபு தனக்கு முன்னே ஒரு காட்சியைக் கண்டான். ஒரு மனிதனைச் சிலர் விலங்கிட்டு நையப் புடைத்து இழுத்துக் கொண்டு சென்றனர். அவனை ஏன் அப்படி இழுத்துக் கொண்டு வரவேண்டும்? அவன் என்ன குற்றம் செய்தான்? என்பன போன்ற கேள்விகள் அவனுள் எழுந்தன. ஆனால் அவனால் விடை காண முடியவில்லை.

எனவே அந்த வீதியில் சென்று கொண்டிருந்த ஒருவரிடம் அதைப் பற்றி விசாரித்தான்

''நீ ஊருக்குப் புதியவன் போலிருக்கிறது. அதனால்தான் உனக்குத் தெரியவில்லை. இவன் முழுச் சோம்பேறி. கைகால்கள் நன்றாக இருந்தும்கூட, அவன் எந்த வேலையும் செய்ய மாட்டான். இந்த ஊரில் யாரும் சோம்பேறியாக இருக்கக் கூடாதே. இதனால் தான் இந்தச் சோம்பேறியை இப்படித் தெருவில் அடித்து இழுத்துக் கொண்டு போகிறார்கள்'' என்றார்.

இதைக் கேட்ட கோபுவுக்கு உடம்பெல்லாம் உதறியது. 'ஒரு வேலையும் செய்யாத சோம்பேறி என்று தெரிந்தால் நம்மையும் அல்லவா இப்படி இழுத்துச் செல்வார்கள்' என்று எண்ணிய கோபுவுக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. பசிகூடப் பறந்துவிட்டது.

உடனே அவனுக்குப் பாட்டியின் ஞாபகம் வரவே, பாட்டியின் வீட்டை நோக்கி வேகமாக ஓடினான்.

அந்தப் பாட்டியோ வேலை முடிந்து ஓய்வெடுத்துக் கொண்டிருந்தாள்.

''பாட்டி, பாட்டி எனக்கு ஏதாவது வேலை கொடு'' என்று கேட்டான்.

''அடடே, நீயா? வேலையெல்லாம் முடிந்து விட்டதே. நீதான் எந்த வேலையும் செய்ய முடியாதென்றாயே? உனக்காக வேலை காத்துக் கொண்டிருக்காது. வேலை செய்வது இழிவானதல்ல என்று தெரிந்து கொண்டாயா?'' என்றாள் பாட்டி.

பாவம், கோபு பாட்டியின் வீட்டை விட்டுத் தலையைத் தொங்கப் போட்டுக் கொண்டு வந்தான். பாட்டியின் வீட்டுக்குப் பக்கத்தில் ஒரு தச்சன் வேலை செய்துகொண்டிருப்பதைக் கண்டான். கோபு அவனிடம் எப்படியாவது வேலை தரும்படி கெஞ்சினான். மனமிரங்கிய தச்சனும் அவனுக்கு வேலை கொடுத்தான்.

அப்பொழுது அந்தத் தெரு வழியாக எளிய உடையுடன் நடந்து சென்ற மனிதன் ஒருவன் கோபுவைப் பார்த்துக் கேட்டான்: ''இப்பொழுதாவது வேலை செய்வது இழிவானதல்ல என்பதை உணர்ந்து கொண்டாயா?''

அந்த மனிதன்தான் கோபு முதலில் பார்த்த போது மண்பாண்டங்கள் செய்து கொண்டிருந்தவன்.

ஆனால் தச்சனோ அந்த மனிதனைச் சுட்டிக் காட்டி, ''இவர்தான் இந்த நாட்டு ராஜா'' என்றான்.

''என்ன, உங்கள் ராஜா ஒரு குயவரா?'' என்று கேட்டான் கோபு.

காரசாரமான புதிர்!

காரம்

1. பசிக்குத் தேவையான காரம் — [illegible]
2. பார்வைக்கு அழகாயில்லாத காரம் — [illegible]
3. பதவியில் இருப்பவர் பண்ணும் காரம் — [illegible]
4. பாவத்துக்குத் தேடும் காரம் — [illegible]
5. நாம் சுற்றி வரும் காரம் — [illegible]
6. அழிவைத் தரும் காரம் — [illegible]
7. சாதுரியமாகப் பேசும் காரம் — [illegible]
8. பெண்களுக்குப் பிரியமான காரம் — [illegible]
9. சமயத்தில் பிறர்க்குச் செய்யும் காரம் — [illegible]

சாரம்

1. சிலர் அனுஷ்டிக்கும் சாரம் — [illegible]
2. நாம் கேள்விப்படும் சாரம் — [illegible]
3. கவலையைத் தரும் சாரம் — [illegible]
4. ஒரு திட்டத்துக்கு வெற்றி தரும் சாரம் — [illegible]
5. கணவனின் மறு பாதி இந்தச் சாரம் — [illegible]
6. தற்போது வெட்டுப்பட்டுள்ள சாரம் — [illegible]
7. விருந்தோம்பிச் செய்யும் சாரம் — [illegible]



தொகுப்பு: துரை. சீனிவாசன்

அதற்குத் தச்சன் சொன்னான்:

''எங்கள் ராஜாவுக்கு எல்லா வேலைகளும் தெரியும். எந்த வேலை செய்வதையும் இழிவாகக் கருத மாட்டார். இவர் மிக எளிமையானவர். அதனால்தான் இந்த நாட்டு மக்களும் எந்த வேலையைச் செய்வதையும் இழிவாகக் கருதாமல் எளிய வாழ்வு வாழ்ந்து முன்னேறுகிறார்கள். 'மன்னன் எவ்வழி மக்கள் அவ்வழி' என்பது பழமொழி அல்லவா?''

இப்படி அந்தத் தச்சன் தன் நாட்டுச் சிறப்பை விரிவாகக் கூறிக்கொண்டே போனான்.

'வேலை செய்வது இழிவு என்பது எவ்வளவு பெரிய தவறு? சும்மா சோம்பேறியாக இருப்பதல்லவா இழிவானது' என்று தனக்குள் கூறிக்கொண்ட கோபு இனிச் சோம்பேறியாக இருப்பதில்லை எனத் தீர்மானித்துக் கொண்டான்.

கோபு அப்படி எண்ணமிட்ட மாத்திரத்தில் அவன் முன்னே இருந்த தச்சன் மறைந்தான். அவனிருந்த இடத்தில் அந்த வனதேவதையே தோன்றினாள்.

''கோபு, நீ திருந்தியது குறித்து எனக்கு மிகவும் மகிழ்ச்சி உனக்கு என்ன வேண்டும் கேள்!''

''நான் என் வீட்டுக்குப் போக வேண்டும்'' என்றான் கோபு.

''கண்ணை மூடிக்கொள். நான் உன் பெயரைச் சொல்லிக் கூப்பிட்டதும் கண்ணைத் திற'' என்றது தேவதை.

''கோபு, கோபு'' என்று கூப்பிட்டபடி தன்னை யாரோ உலுக்குவதை உணர்ந்து கோபு திடுக்கிட்டுக் கண் விழித்தான். தான் முதலில் உட்கார்ந்திருந்த மரத்தடியிலேயே உட்கார்ந்திருப்பதையும், தனக்கு முன் தன் தந்தை நின்றிருப்பதையும் கண்டான்.

''ஏண்டா மரத்தடியிலா தூங்குவது?'' என்று கேட்ட அவன் தந்தை அவனை வீட்டுக்கு அழைத்துச் சென்றார்.

'நான் கண்டது கனவா அல்லது உண்மையிலேயே நடந்ததா?' என்று தனக்குள்ளே கோபு கேட்டுக் கொண்டான். ஆனாலும் அவனால் விடை கண்டுபிடிக்கவே முடியவில்லை.

நடந்தது உண்மையோ கனவிலோ எப்படியானாலும் அதற்குப் பிறகு கோபு மிகவும் நல்ல பையனாக மாறி விட்டான். 'சாது கோபு'வானான்.

உண்மை ஊழியன்!

'ஜெயஸ்ரீ'

முன் ஒரு காலத்தில் ஒரு சிறிய கிராமம். அந்த அழகிய கிராமத்தில் ஒரு பையன் வசித்து வந்தான். அவனது பெயர் முருகன். முருகன், சிறுவனாக இருக்கும் பொழுதே ஆடு மேய்க்கும் தொழிலை மேற்கொண்டு நிம்மதியாக வாழ்ந்து வந்தான்.

ஒரு நாள் அவன் ஆடுகளை மேய்த்துக் கொண்டிருந்த சமயம் அவ்விடம், ஒரு வேட்டைக்காரர் வந்தார். அவர் முருகனை நோக்கி, ''பையா! பக்கத்துக் கிராமம் இங்கிருந்து எவ்வளவு மைல் இருக்கும்?'' என்று கேட்டார்.

''ஆறு மைல் தூரம் இருக்கிறது, ஐயா! அதுதான் சமீபத்தில் உள்ள கிராமம். ஆனால் பாதைகள் நேரானதல்ல. மிகவும் குறுகலான ஒற்றையடிப் பாதை வழியாகப் போக வேண்டும். நீங்கள் மிகவும் கவனமாக வழியைப் பார்த்துப் போகாவிடில் வழி தவறிப் போகும்படியும் நேரும்'' என்றான்.

''ஓ, அப்படியானால் நீ என்னுடன் வந்து வழி காட்ட முடியுமா! நான் உனக்கு வெகுமதி கொடுப்பேன்.''

''நான் மிகவும் வருந்துகிறேன், ஐயா! என்னால் ஆடுகளை விட்டு விட்டு வரமுடியாது! அவை எங்காகிலும் போய்விடும். மேலும் ஓநாய்கள் வந்து அவைகளைக் கொன்று தின்று விடும்'' என்றான்.

''கவலையே படாதே, பையா! செத்துப் போன ஆடுகளின் விலையை நான் கொடுக்கிறேன். இந்த ஆடுகளை இப்படியேவிட்டுவிட்டு எனக்குவழிகாட்டு!''

''இந்த ஆடுகள் என் யஜமானருடையவை. நான் யஜமானருக்குத் துரோகம் செய்ய மாட்டேன்'' என்று தீர்மானமாகச் சொல்லி விட்டான் முருகன்.

''சரி! அப்படியென்றால் நான், உன் ஆடுகளைப் பார்த்துக் கொள்கிறேன். நீ போய் வேறு ஒருவனை வழி காட்ட அழைத்து வருவாயா?''

''ஆடுகளுக்கு உங்களது குரலைப் புரிந்துகொள்ள முடியாது. ஆகையால் உங்களிடம் அவை அடங்கியும் நடக்காது. எனவே இந்த உதவியும் என்னால் செய்ய இயலாது!''

எவ்வளவு கெஞ்சியும் உதவி செய்ய மறுக்கும் முருகன்பேரில் அந்த வேட்டைக்காரருக்குக் கோபம் அல்லவா வர வேண்டும்? ஆனால் அதற்கு மாறாக, முருகன் பேரில் அளவுகடந்த அன்பு உண்டாயிற்று. ''நல்ல பையன், யஜமானர் பேரில் அன்பு உள்ளவன். நாணயமானவன்'' என்று முருகனைப் பற்றிப் பலவாறு மனத்துக்குள் புகழ்ந்து கொண்டார். முடிவில், அவனிடம் கிராமத்துக்குப் போகும் வழியைக் கேட்டுக் கொண்டு தனியே சென்றுவிட்டார்.

அங்கிருந்து முருகன் அருகில் ஓடி வந்த ஒரு மனிதர், ''அதோ போகிறாரே, அவர் யார் தெரியுமா? நம் இளவரசர்'' என்று சந்தோஷத்தால் கத்தினார்.

''ஓ! அந்த வேட்டைக்காரர் இளவரசரா? நான் அவர் கேட்ட உதவி செய்யவில்லையே? அவர் என் மீது கோபம் கொண்டிருப்பாரோ?'' என்று தனக்குள் சொல்லிக் கொண்டான்.

சில நாட்கள் சென்றன. அரசரிடமிருந்து சேவகன் ஒருவன் வந்து முருகனை அரசர் அழைப்பதாகச் சொல்லி அழைத்தான். முருகனுக்கு உடலெல்லாம் நடுங்கியது. தனக்குச் சரியான தண்டனை கிடைக்கப் போகிறது என்று பயத்தோடு அரண்மனைக்குச் சென்றான்.

ஆனால் அரசர் புன்னகையோடு, ''முருகா! இளவரசர் உன்னைப்பற்றி எல்லாம் சொன்னார். உன் ஆடுகளை விட்டு விட்டு அரண்மனையில் வேலை செய்ய வந்து விடு. உன்னிடம் நல்ல குணங்கள் இருக்கின்றன. உன்னைப் போன்ற ஊழியர்கள் அரண்மனைக்கு மிகவும் தேவை!'' என்றார்.

தனக்கு நல்லதொரு எதிர்காலம் கிட்டுவதாக இருக்கும்போது அதைத் தட்டிக் கழிக்கலாமா? அதனால் முருகன் சிறிது நேரம் யோசித்தான். பிறகு, ''ஊருக்குப் போய் என் எஜமானரிடம் சொல்லிவிட்டு, ஆடு மேய்க்க வேறொருவன் கிடைக்கும் வரையில் இருந்துவிட்டு வருகிறேன்!'' என்றான் முருகன்.

அரசரும், அவனுடைய எஜமான விசுவாசத்தைக் கண்டு மகிழ்ந்து, ''ரொம்ப சரி. அப்படியே செய்!'' என்றார்.

முருகன் ஊருக்கு வந்து தன் எஜமானரிடம் நடந்ததைச் சொல்லி விடை பெற்றுக் கொண்டு அரண்மனைக்குத் திரும்பினான். அரசனுக்கு முருகன் மிகுந்த விசுவாசம் உள்ள ஊழியனாக நீண்ட காலம் சேவை செய்தான்.





ஓ, அப்படியா?

பட்டு: குயில் காக்கையின் கூட்டில் போய் முட்டையிட்டு வந்து விடுமாம். குயிலுக்காகக் காகம் தான் அடை காக்குமாம். குஞ்சு பெரிதான பிறகு குரல் எழுப்பும் போதுதான் காகத்துக்குத் தான் அடை காத்தது தன் முட்டையல்ல என்பது தெரியுமாம்.

கிட்டு: இதே காரியத்தை அமெரிக்காவில் வாழும் பசுப் பறவை (Cow bird) யும் செய்கிறதுதே!

பட்டு: நிஜமாகவா?

கிட்டு: ஆமாம், (Yellow warbler) என்றோர் இனம். இது மஞ்சள் நிறப் பாடும் பறவை. இதன் கூட்டில் கொண்டு போய்க் கௌபேர்டு தன் முட்டையை இடுகிறது, அடை காக்கும் தொல்லையிலிருந்து விடுபட. ஆனால் அந்த வார்ப்ளர் இருக்கிறதே. அது காக்கையைப் போல் அசடல்ல. 'மாற்றான் முட்டையை அடை காப்பதா?'' என்று தன் முதல் கூட்டின் மீது மற்றொரு கூட்டைக் கட்டும். கௌபேர்டு பலே பறவை. புதுக் கூட்டிலும் வந்து இன்னொரு முட்டையை இட்டு விட்டுப் போய் விடும். மஞ்சள் வார்ப்ளர் அதற்கும் மேலே மூன்றாவது கூட்டைக் கட்டுகிறதாம் — மாற்றான் முட்டைக்கு முதல் மாடியை ஒழித்துக் கொடுத்துவிட்டு!



பட்டு: நல்ல தமாஷாக இருக்கிறதே!

கிட்டு: கௌபேர்ட்டின் முட்டை பெரிது. இதன் குஞ்சும் பெரிதாக இருப்பது மட்டுமல்ல, வார்ப்ளர் தன் குஞ்சுகளுக்காகக் கொண்டு வரும் உணவிலே பெரும் பகுதியை கௌபேர்ட்டின் குஞ்சு 'ஸ்வாஹா' செய்து விடும். கூட்டின் பெரும் பகுதியையும் ஆக்கிரமித்துக் கொள்ளும்.

பட்டு: கௌபேர்டு, யெல்லோ வார்ப்ளர் பறவையின் கூட்டில் மட்டும்தான் தன் முட்டைகளை இடுகிறதா?

கிட்டு: அப்படி ஒன்றும் இல்லை. வேறு பறவைகளின் கூடுகளிலும் இது தன் முட்டைகளை இடுவதுண்டு. சில பறவைகள் மட்டும் கௌபேர்டு முட்டையை இனம் கண்டு கொண்டு அதை உருட்டித் தள்ளிவிடும். சில வேளைகளில் இவையும் கூடக் கௌபேர்டின் குஞ்சுகளைத் தம் குஞ்சுகளாகப் பாவித்து போஷிப்பதும் உண்டு. இப்படித் தன் முட்டைகள் வீணாவதற்கான வாய்ப்பு உண்டு என்பதனாலேயே கௌபேர்டு அதிகமான முட்டைகளை இடுகிறது.

பட்டு: ஓ, அப்படியா? நம்ம குயிலின் பாடே தேவலாம் போலிருக்கிறதே!

முன்பொரு காலத்தில் வளநாடு என்றொரு தேசம் சீரோடும் சிறப்போடும் விளங்கியது. அந்த நாட்டை வீரசேனன் என்றொரு மன்னர் ஆண்டு வந்தார்.


வீரசேனருக்கு இலக்கியத்தில் நல்ல பற்று உண்டு. புலவர்களை அவன் மிகவும் ஆதரித்து வந்தான். சிறந்த கவிதைகள் எழுதுகிறவர்களுக்குப் பொன்னும் மணியும் அள்ளி அள்ளிக் கொடுத்தார்.

வளநாட்டில் உள்ள மார்த்தாண்டபுரத்தில் சொக்கன் என்றொரு குருடன் வாழ்ந்து வந்தான். அவனுக்கு இலக்கியத்தில் கொஞ்சம் பயிற்சி உண்டு.

சொக்கனுக்கு மிகுந்த ஞாபக சக்தி இருந்தது. எதையும் ஒரு தடவை காதால் கேட்டால் அப்படியே திரும்பக் கூறி விடுவான். அவனிடம் இரண்டு சீடர்கள் இருந்தார்கள். முதல் சீடன் எதையும் இரண்டு முறை கேட்டால் திரும்பக் கூறி விடுவான். இரண்டாம் சீடனோ மூன்று முறை கேட்டுவிட்டால் எதையும் மனப் பாடமாக ஒப்பித்துவிடுவான்.

சொக்கனுக்குத் தனது இலக்கியப் புலமையை மன்னர் வீரசேனரிடம் காட்டிப் பரிசு பெற வேண்டும் என்ற ஆசை உண்டாயிற்று. சீடர்களை அழைத்துக் கொண்டு மன்னர் வாழ்கிற தலைநகரான நல்லூரை அடைந்தான்.

அங்கு மன்னர் பரிசளிக்கும் முறையைப் பற்றி விசாரித்தான். சொந்தமாகக் கவி பாடுபவர்களுக்குத்தான் வீரசேனன் பரிசு கொடுப்பதாகக் கூறினார்கள். சொந்தமாகக் கவி, பாட முடியாத சொக்கன் ஏதாவது தந்திரத்தால் மன்னரிடமிருந்து பரிசைப் பெற நினைத்து நல்லூரிலேயே கொஞ்ச நாட்கள் தங்கியிருந்தான்.



ஒரு நாள், பக்கத்து நாட்டிலிருந்து அழகேசர் என்ற பெரிய புலவர் அரசரிடம் பரிசு பெற வந்திருப்பதைச் சொக்கன் கேள்விப்பட்டான். ஒரு திட்டத்தோடு அவன் சீடர்களை அழைத்துக் கொண்டு அரசவைக்குச் சென்றான்.

அரச அவையில் அழகேசர் மன்னர் வீரசேனரைப் புகழ்ந்து, ஓர் அழகான பாட்டுப் பாடினார். மன்னரும் மனம் மகிழ்ந்து அழகேசருக்கு நவரத்தின மாலை ஒன்றைப் பரிசு கொடுக்க எழுந்தார்.

அப்பொழுது குருட்டுச் சொக்கன் எழுந்து, ''அரசே! அழகேசர் பாடிய பாட்டு நான் முன்பு எழுதியது: இதை எப்படியோ அவர் தம்முடையது போல் தங்களிடம் பாடிக் காட்டி விட்டார்'' என்றான். இதனைக் கேட்டுச் சபையே அதிசயத்தில் மூழ்கியது.

அரசருக்கு ஒன்றும் புரியவில்லை. உண்மையை அறிந்து கொள்ள விரும்பி ''இதை எப்படி நம்புவது?'' என்று கேட்டார் அரசர்.

''இதோ நான் கவிதையைக் கூறுகிறேன்'' என்று சொல்லி முதலில் கேட்ட கதையை அப்படியே ஓர் எழுத்துப் பிசகாமல் ஒப்பித்தான் சொக்கன். பிறகு, ''இந்தப் பாட்டை எனது சீடர்களுக்கும் கற்றுக் கொடுத்திருக்கிறேன். அவர்களும் பாடுவார்கள்'' என்றான்.

முதல் சீடன் அழகேசரும் சொக்கனும் பாடியதைக் கேட்டுக் கொண்டிருந்ததால் அப்படியே பாடிவிட்டான்.

இரண்டாம் சீடன் மூன்று முறை கேட்டுவிட்டதால் மனப் பாடமாகச் சொல்லி விட்டார்!

அரசரும் அவையோரும் சொக்கன் சொன்னதை நம்பி விட்டார்கள். அரசர் அழகேசருக்குக் கொடுக்க விரும்பிய பரிசைச் சொக்கனுக்குக் கொடுத்ததோடு அல்லாமல், சொக்கனைத் தமது அவைப் புலவராகவும் நியமித்து விட்டார்.

அழகேசரால் பாடலைப் பாடியது தாம்தான் என்று நிருபிக்க

முடியவில்லை. அவமானத்துடன் அவையை விட்டு வெளியேறினார். உண்மையைக் கண்டறிந்து அதனை அனைவருக்கும் உணர்த்த வேண்டும் என்ற முடிவோடு அவர் நல்லூரிலேயே தங்கிவிட்டார்.

சொக்கனை அரசாங்கக் கவியாக்கிய நாளிலிருந்து வேறு எந்தப் புலவரும் வந்து பரிசு பெற முடியவில்லை. யார் வந்து எதைப் பாடினாலும், அதை அப்படியே திரும்பப் பாடி, தனது பாட்டு என்று நிலைநிறுத்தி, வந்தவர்களையெல்லாம் சொக்கன் மட்டம் தட்டி அனுப்பிக் கொண்டிருந்தான். மன்னர் வீரசேனரும் சொக்கனின் திறமையில் மிகுந்த நம்பிக்கை வைத்திருந்தான்.

இதற்கிடையில் பெரிய புலவரான அழகேசர் விடாது முயற்சி செய்து, சொக்கன் வீட்டு வேலைக்காரி மூலமாக உண்மையை அறிந்தார். ''முள்ளை முள்ளாலேயே எடுக்க வேண்டும்'' என்று ஒரு தந்திரம் செய்தார்.

சொக்கனின் சீடர்கள் இரண்டு பேருக்கும் இரண்டு வகையான வேலை உண்டு. முதல் சீடன், சொக்கன் அவைக்குள்ளே நுழையும் போது கைத் தடியை வாங்கி வாசல் பக்கம் வைத்து விட்டு அழைத்துச் செல்வான். கைத் தடியின் காவல் பொறுப்பு அவனைச் சார்ந்தது.

சொக்கனுக்கு மூக்குப் பொடி போடும் பழக்கம் உண்டு. அவனது பொடி டப்பாவில் பொடி குறையாமல் பார்த்துக் கொள்ள வேண்டிய பொறுப்பு இரண்டாவது சீடனுடையது. இவற்றையெல்லாம் அழகேசர் தெரிந்து வைத்து ஒரு வகையான ஏற்பாடு செய்து வைத்திருந்தார்.

ஒரு நாள் புதிதாக ஒரு கவிதை எழுதிக் கொண்டு அழகேசர் அவைக்குச் சென்றார். அங்கே சொக்கனும் அவனது சீடர்களும் அமர்ந்திருப்பதை நன்கு கவனித்துக் கொண்டார்.

கவிதையைப் படிக்கும் முன்னர், அரசரிடம் ஒரு விண்ணப்பம் செய்து கொண்டார். அதாவது அவர் எழுதி வைத்திருக்கும் கவிதையின் பிரதி ஒன்றை அரசரிடம் கொடுத்து, அதனை மனத்துக்குள்ளாக ஒருமுறை படித்துப் பார்த்துக் கொள்ள வேண்டும் என்பது தான் அவரது விண்ணப்பம். அரசரும் அப்படியே செய்தார். அவையோருக்கு, 'அவர் ஏன் அப்படி விண்ணப்பித்துக் கொண்டார்?' என்பது புரியவில்லை.

சொக்கனே, ''கவிதையைப் படிக்கச் சொல்லுங்கள். நான் பாடியதாக இருந்தாலும் இருக்கும்'' என்றான். அழகேசர் கவிதையைப் படித்தார். ஆனால் படிக்கும்போது இடைஇடையே சில வரிகளை விட்டு விட்டுப் படித்தார். இது சபையோருக்குத் தெரியாவிட்டாலும் அரசருக்குத் தெரிந்தது. ஆனால் அழகேசர் ஏன் அப்படிச் செய்தார் என்பது மட்டும் புரியவில்லை.


அழகேசர் கவிதையைப் படித்து முடித்தார். அப்பொழுது அவர் ஏற்பாடு பண்ணியிருந்த ஓர் ஆள் வந்து வெளியில் வைத்திருந்த குருட்டுச் சொக்கனின் கம்பை எடுத்துச் சென்றான். அதைக் கண்ட முதல் சீடன் கம்பைத் திரும்ப வாங்கி வர வெளியே சென்றான்.

சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு அழகேசர், ''இது உங்கள் அவைப் புலவர் பாடிய பாட்டாக இருந்தால் அவரைப் பாடச் சொல்லுங்கள்'' என்றார். உடனே சொக்கன், தனது முதல் சீடன் வெளியே சென்றதை உணராது, தான் கேட்டதை அப்படியே ஒப்பித்தான்.

சொக்கன் ஒப்பித்து முடித்த நேரத்துக்கு முதல் சீடன் வந்தான். அந்தச் சமயத்தில் சொக்கனுக்கு முன்னால் இருந்த பொடி டப்பாவைக் கைத் தவறுதலாகத் தட்டியது போல் அழகேசர் கீழே தட்டிவிட்டார். பொடி கீழே சிந்தியது. உடனே பொடி வாங்கி வர வெளியே சென்றான் இரண்டாம் சீடன்.

அவன் வெளியே சென்றவுடன் அழகேசர். ''சொக்கன் பாடியதைப்போல்





அவரது சீடர்களும் பாடினால் இதனைச் சொக்கனே பாடினார் என்று ஒப்புக் கொள்ளுகிறேன்'' என்றார்.

சொக்கன் முதல் சீடனைப் பாடக் கூறினான். முதல் சீடனோ ஒரு முறை தான் கேட்டிருந்ததால் 'திரு திரு' என்று விழித்தான். ''ஏன் பாடாமல் நிற்கிறாய்?'' என்று மன்னர் கேட்டபோது, ''எங்கள் குரு பாடியதை நான் கேட்க வில்லையே? இன்னும் ஒரு முறை அவர் பாடினால் நான் ஒப்பிக்கிறேன்'' என்றான்.

சொக்கனுக்கு மனத்தில் புளியைக் கரைத்தது போலிருந்தது.

அந்த நேரத்தில் இரண்டாம் சீடன் பொடியோடு திரும்பி வந்தான். அழகேசர், ''முதல் சீடன் பாடாவிட்டால் பரவாயில்லை. இரண்டாவது சீடனாவது பாடினால் இதைச் சொக்கனே எழுதியதாக ஒப்புக் கொண்டு தலை வணங்குகிறேன்'' என்றார்.

மன்னர் இரண்டாவது சீடனைப் பாடக் கூறினார். அவனோ, ''இரண்டு தடவைதானே கேட்டேன்? மூன்று தடவை கேட்டால்தானே என்னால் அப்படியே கூற முடியும்?'' என்று சொல்லித் தடி மரம் போல் நின்றான்.

அரசருக்கும் அவையோருக்கும் ஒன்றும் புரியவில்லை. அப்பொழுது அழகேசர் எழுந்து, மன்னரை வணங்கி, ''அரசே! பல நாள் திருடன் ஒருநாள் அகப்படுவான் என்பது இங்கே இன்று உண்மையாகி விட்டது. குருட்டுச் சொக்கனுக்குப் 'பாட்டுக் கட்டவே' தெரியாது. ஆனால் ஒரு தடவை எதையாவது கேட்டால் அப்படியே சொல்லக்கூடிய திறமை உண்டு. அதைக் கொண்டே இது வரையில் ஏமாற்றி வந்தான். ஆதலால்தான் இன்று நான் படிக்காமல் விட்ட வரிகளை அவனும் கூறாமல் இருந்துவிட்டான். முதல் சீடன் எதையும் இரண்டு தடவை கேட்டால் ஒப்பித்து விடுபவன். இரண்டாம் சீடனுக்கு மூன்று முறை கேட்டால்தான் ஒப்பிக்க முடியும். இன்று நான் செய்த ஏற்பாட்டினால் மூவரும் ஏமாந்து போனார்கள்.

வேறு வழியின்றிச் சொக்கனும் உண்மையை ஒப்புக் கொண்டான்.

மன்னர் வீரசேனர் அழகேசனின் புலமையைப் புகழ்ந்தும் புத்திக் கூர்மையை மெச்சியும் பரிசுகள் வழங்கியதோடு அவரையே அரசாங்கக் கவிஞராக நியமித்தார். உண்மை வென்றதை நினைத்து அனைவரும் மகிழ்ந்தனர்.



பாவம் என்றால் என்ன?

மு. ஆதம்ஷா

பாரதியார் துவக்கப் பள்ளியில் ஐந்தாம் வகுப்பில் படிக்கும் கடல்வண்ணன் பள்ளி விட்டு இவ்வளவு நேரம் கழித்து வீட்டுக்கு வந்து சேர்ந்தான். அவனுடைய தாயார் அவனைக் கேட்டாள்:

''ஏண்டா கடல்வண்ணா! இப்போது தான் பள்ளிக்கூடம் விட்டார்களா?''

''இல்லேம்மா. வர வழியிலே நம்ம ரகுவும் ராஜுவும் ஒருத்தன் அடிச்சாணுங்க. நான் அதைப் பார்த்துக் கொண்டே நின்னுட்டேன்!''

ஏண்டா கண்ணு! நீ அவங்களை விட பெரியவனாச்சே! ஒருவன் அடிச்சா பாவம்னு சொல்லி அவங்களை அழைச்சுண்டு வர வேண்டாமோ?''

''பாவமா? பாவம், பாவம்னு எங்க சார் கூடச் சொல்றார். அம்மா, பாவமுன்னு என்னம்மா?''

''ஒருவன் செய்ய வேண்டியதைச் செய்யாம விடறதும், செய்ய வேண்டாததைச் செய்யறதும்தான் பாவம்.''

''நீ சொல்றது எனக்கு ஒண்ணும் புரியலையே!''

''புரியலையா? உட்கார்! விளக்கமாகச் சொல்கிறேன்!''

பாவம் என்றால் என்ன?' என்று தெரிந்து கொள்ளும் ஆர்வத்தோடு கடல்வண்ணன் உட்கார்ந்தான். தாய் பேச்சைத் தொடர்ந்தாள்.

''உனக்கு மகாபாரதக் கதை தெரியுமே! கௌரவர்கள் எத்தனை பேர், சொல்லு.''

''கௌரவர்கள் நூறு பேர்..... பாண்டவர்கள் அஞ்சு பேர்.''

''கௌரவர்களுக்கும் பாண்டவர்களுக்கும் வில் வித்தை கற்றுத் தந்தவர் யார்?''

''துரோணர்......''

''ஆம்...அந்தத் துரோணருக்கு வயசாகிப் போச்சு. சாகக் கிடந்தார். அப்போ அவர் மனைவி அவர் பக்கத்திலேயே இருந்து அவரைக் கவனிச்சுக் கிட்டிருந்தாள்! அவள் ஒரு நாள் துரோணர் கிட்டே கேட்டாள்: 'சுவாமி! ஒரு வாரமாக உங்களுக்கு மூச்சுத் திணறுகிறது. நீங்க படற அவஸ்தையை என்னாலே காணச் சகிக்கலே. அம்பு பட்ட புறாப்போல் துடிக்கிறீர்கள். இப்படித் துடித்துத் துடித்துச் சாகவா நீங்கள் இத்தனை தவம் செய்தீர்கள்?'' என்று கேட்டாள்.



''அப்போது துரோணர் சொன்னார்: 'பெண்ணே! துரியோதனன் சபையிலே திரௌபதி நிர்க்கதியாக நின்று கொண்டிருந்தாள். அவளை மானபங்கப் படுத்த எண்ணித் துரியோதனனின் தம்பி துச்சாதனன் தனது கச்சையை வரிந்து கட்டி அவள் அருகில் சென்று அவள் கட்டியிருந்த சேலையைப் பலருடைய முன்னிலையில் பலாத்காரமாக உரித்தான். அப்போது அவள் சபையில் உள்ளவர்களைப் பார்த்து, 'ஐயோ, என் மானத்தைக் காப்பார் யாரும் இல்லையா?' என்று மிகப் பரிதாபமாகக் கதறினாள். அவள் கதறல் வானவர் காதுகளிலேயே பட்டது என்றால் என் காதுகளில் விழாதிருக்குமா?.... நன்றாக விழுந்தது. நான் துரியோதனனுக்குக் குரு. ஆகையால் உடனே அவனைக் கண்டித்து அந்த நிகழ்ச்சியைத் தடுத்து நிறுத்தி அந்தக் கற்புக்கரசியின் மானத்தைக் காப்பாற்றியிருக்கலாம். அல்லது அந்த இழி செயலைக் காணாமல் அந்த இடத்தை விட்டே நான் வெளியேறியிருக்கலாம். அந்த இரண்டையுமே செய்யாமல் நானும் கூட்டத்தினரோடு சேர்ந்து சும்மா இருந்தேன். அந்தத் தோஷம் என்னைச் சும்மா விடுமா? அவள் மானத்துக்காகத் துடித்ததுபோல் பத்து நாட்களுக்காவது நான் மரணத்தில் துடிக்க வேண்டாமா?' என்றார். இப்போது உனக்குப் பாவம் எதுன்னு புரியுதோ?''

''நல்லாப் புரியுது அம்மா! அவனுங்க ஒருத்தன் அடிச்சதை நிறுத்தியிருக்கணும். அல்லது அதைப் பார்க்காம ஓடிவந்திருக்கணும். ''ஆமாம்மா! இனிமே செய்ய வேண்டியதைச் செய்யாமலும் இருக்கமாட்டேன். செய்ய வேண்டாததைச் செய்யவும் மாட்டேன்!''

''சபாஷ்! ரொம்பப் புத்திசாலியாகி விட்டாயே!'' என்றாள் அம்மா அன்புடன்.

"செய்தக்க அல்ல செயக் கெடும் செய்தக்க
செய்யாமையானும் கெடும்."

திருக்குறள்





1648. ஹாலந்து நாட்டின் தேசிய மலரின் பெயர் என்ன?

1649. மொகலாயர்களில் கடைசி மன்னர் யார் ?

1650. ஹுமாயூன் அரசியல் அநாதையாகத் திரிந்தபோது அவரை விரட்டிய முகமதிய அரசர் யார் ?

1651. மின்சார விளக்கைக் கண்டு பிடித்தவர் யார், எந்த ஆண்டில் ?

1652. இடிதாங்கியைக் கண்டு பிடித்தவர் யார் ?

1653. மலை ஏறும்போது நாம் முன் பக்கமாகச் சற்றே குனிந்த நிலையில்தான் செயல்படுகிறோம். இது ஏன் ?

1654. இரு தூரப் பார்வையுள்ள (பை ஃபோகல்) மூக்குக் கண்ணாடியைக் கண்டுபிடித்தது யார் தெரியுமா ?

1655. ஒலியின் வேகம் எவ்வளவு?

1656. ஆண்களுக்கான ஆசிய லான் டென்னிஸ் ஆட்டத்தின் சாம்பியன் பட்டத்தை 1972ல் பெற்றவர் யார் தெரியுமா ?

1657. மாரிக்கால விளையாட்டுக்களுக்குப் புகழ் பெற்ற ஐரோப்பிய நாடு எது ?

1658. மேற்குப் பாரதத்துக்கான பம்பாயில் நடைபெறும் முக்கிய கால்பந்தாட்டப்போட்டியின் பெயர் தெரியுமா?

1659. பாட்மிண்டனுக்கான ஜூனியர் சாம்பியன்ஷிப் டிராஃபியை 1972ல் பெற்ற மாநிலம் எது ?

1660. கல்கத்தாவில் டெஸ்ட் கிரிக்கெட் ஆடும் மைதானத்தின் பெயர் என்ன ?

1661. ஹாக்கி ஆட்டத்தின் மந்திரவாதி என்று யாருக்குப் பெயர் ?

1662. ஆனந்தமடம் என்ற புகழ் பெற்ற நவீனத்தை எழுதியவர் யார்?

1663. ரஷ்யாவின் சர்வாதிகாரியாக விளங்கிய ஸ்டாலினின் மகள் ஸ்வெத்லானா ஒரு புத்தகம் எழுதியிருக்கிறாள். அதன் பெயர் தெரியுமா?

1664. கீதாஞ்சலி என்ற நூலுக்கான நோபல் பரிசை ரவீந்திரநாத் தாகூர் பெற்றது எந்த ஆண்டில் தெரியுமா?

1665. முந்திரிப் பருப்பு ஏராளமாக ஏற்றுமதி செய்யக்கூடிய பாரத மாநிலம் எது தெரியுமா ?

1666. சர்வதேசத் தொழிலாளர் தினமாக வருஷத்தின் எந்த நாளைக் கொண்டாடுகிறார்கள்?

1667. ஐ. நா. சபையின் வாசக சாலைக்கு புகழ் பெற்ற ஒருவரின் பெயரைச் சூட்டியிருக்கிறார்கள். அவர் யார்?

1668. பாரத விண்வெளி ஆராய்ச்சிக் கழகத்தின் தலைமைப் பதவியை டாக்டர் விக்ரம் சாராபாய்க்குப் பிறகு வகித்தவர் யார்?

1669. ஒரு லீக் என்பதற்கு எவ்வளவு மைல்கள்?

1670. ஹாலந்தின் தலைநகரம் ஆம்ஸ்டர்டாம் நகரா? அல்லது ஹேக் நகரா?

விடைகள்: 1648. டுலிப் (Tulip). 1649. பகதூர் ஷா ஸஃபார். 1650. ஆப்கானைச் சேர்ந்த ஷேர் ஷா சூரி என்பவர். 1651. தாமஸ் ஆல்வா எடிஸன் முதல் விளக்கை எரிய விட்டுக் காட்டியது 1879 டிசம்பரில். 1652. பெஞ்சமின் பிராங்க்ளின். 1653. சரிவான பாதையில் ஏறும்போது உடலின் புவிசர்ப்பு மையத்தை முன் பக்கத்துக்குக் கொண்டு போக வேண்டும். அப்போதுதான் கீழே விழாமல் மலை ஏற முடியும். 1654. பெஞ்சமின் ஃப்ராங்க்ளின் 1780-ல். 1655. விநாடிக்கு 341 மீட்டர்கள்—அல்லது மணிக்கு 760.98 மைல்கள். 1656. கே. முகர்ஜி. 1657. ஸ்விட்ஸர்லாந்து. 1658. ரோவர்ஸ் கோப்பைக்கான ஆட்டம். 1659. மைசூர். கேர்ஃபையின் பெயர் நராங். 1660. ஈடன் தோட்டம். 1661. தயான்சந்த் என்பவருக்கு. 1662. பங்கிம் சந்திர சாட்டர்ஜி என்ற வங்க நாவலாசிரியர். 1663. ஒரே ஒரு வருஷம் (only one year) என்பது அந்நூலின் பெயர். 1664. 1913ம் ஆண்டில். 1665. கேரளா. 1666. மே மாதம் முதல் தேதியை மே தினம் என்ற பெயரில். 1667. ஐ. நா. சபையின் பொதுக் காரியதரிசிப் பதவியை அப்பழுக்கற்ற முறையில் நிர்வகித்த அமரர் டாக் ஹாமர்ஷீல்டின் பெயரை. 1668. டாக்டர் எம். ஜி. கே. மேனன். 1669. மூன்று மைல்கள். 1670. அரசாங்கம் இயங்குவது ஹேக் நகரில் அதிகார பூர்வமான தலைநகர். ஆம்ஸ்டர்டாம்.



'கோகுலம்'த்தில் வெளியாகும் கதைகளில் காணப்படும் பெயர்கள், சம்பவங்கள் யாவும் கற்பனையே ● சென்னை, சேத்துப்பட்டு 'கல்கி' அச்சகத்தில், பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்துக்காக வி. வைத்தியநாதன் அச்சிட்டு வி. முரளியால் வெளியிடப்பட்டது ● ஆசிரியர்: கே. ஆர். ஆத்மநாதன்


படிப்படியாக உயர்ந்து
முன்னேற்றமடைந்த அவருக்குத் தெரியும்...
...அழகான ஆடைகளும் அதற்கு உதவின என்று !
MAFATLAL GROUP
நிச்சயமாக, மபத்லால் க்ரூப் அளிப்பவை நேர்த்தியான துணிமணிகள்தான் !
AIYARS-M. 458 TM

REGISTERED NO. M. 9040 GOKULAM, Children's Fortnightly

